# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 12 சனிக்கிழமை (28-10-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:268


**பண்டாரவளை தடுப்பு முகாம் படுகொலைகள்**

# 2 இராணுவ கப்டன்களும் 14 பொலீஸாரும் கைது!

## கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர்

கொழும்பு,ஒக்ரோபர்28

**பண்டாரவளை, விந்துனுவெவ தடுப்பு முகாமில் இருந்த தமிழ்க் கைதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக இரு இராணுவக் கப்டன்களும் 14 பொலீஸாரும் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

பண்டாரவளை விந்துனுவெவ தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த 45 தமிழ் இளைஞர்கள் கடந்த புதன் கிழமை அதிகாலை அங்கு காவலுக்கு இருந்த பொலீஸாராலும் மற்றும் இராணுவத்தினராலும் ஊர் வாசிகளாலும் தாக்கப்பட்டிருந்தனர்.

இந்தத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்துவதற்கென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசேட குழுக்கள் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்தே அங்கு பணியில் இருந்த இரு இராணுவக் கப்டன்களும் 14 பொலீஸாரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள இவர்கள் கொழும்

(10ஆம் பக்கம் பார்க்க)

### அனுராவின் மெய்ப்பாதுகாவலர் சுட்டுக் கொலை

சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவின் மெய்ப்பாதுகாவலரான சப்.இன்ஸ்பெக்டர் அஜித் ஜெயந்த நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

ராகமவில் உள்ள அவரது வீட்டில் அவர் இருந்த சமயம் இலக்கத் தகடு இல்லாத ஜீப்பில் வந்த இருவர் அவரை வெளியே அழைத்துச் சென்று அவருடன் பேசியதாகவும் -

இரு தரப்புக்கும் இடையில் வாய்த் தர்க்கம் உச்சகட்டம் அடையவே அவரைச் சுட்டுவிட்டு இருவரும் தப்பிவிட்டதாகவும் பொலீஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## யாழ். இளைஞர்கள் இருவரினதும் சடலங்கள் நேற்று வந்து சேர்ந்தன

### இன்று உறவினரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.28

பண்டாரவளை தடுப்பு முகாம் தாக்குதலின் போது கொல்லப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களின் சடலங்களும் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டன.

கொழும்பில் இருந்து விமானம் மூலம் எடுத்துவரப்பட்ட இரு சடலங்களும் நேற்று இரவு 7.30 மணியளவில் பலாலியில் வைத்து யாழ். மேலதிக அரசஅதிபர் து. வைத்திலிங்கத்திடம் கையளிக்கப்பட்டன.

இந்தச் சடலங்களை கேணல் வோர் குணவர்த்தன அவரிடம் கையளித்தார். அவருடன் வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபை அதிகாரியான எஸ். கந்தசாமியும் சென்றிருந்தார்.

அங்கிருந்து எடுத்து வரப்பட்ட இரு சடலங்களும் நேற்றிரவு 9 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

அளவெட்டி தெற்கு தம்பாலையைச் சேர்ந்த செல்வராசா துரை

(10ஆம் பக்கம் பார்க்க)

## படுகொலைக்கு எதிரான உணர்வுகளை ஒவ்வொருவரும் வெளிப்படுத்த வேண்டும்

### துக்க அனுஷ்டிப்பை முன்னிட்டு ஈ.பி.டி.பி. அறிக்கை

யாழப்பாணம்,ஒக்.28

பண்டாரவளை புனர்வாழ்வு முகாம் தமிழ்க்கைதிகள் படுகொலை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இதற்கு எதிரான உணர்வுகளை ஒவ்வொருவரும் வெளிப்படுத்த வேண்டும்.

மேற்கண்டவாறு ஈ.பி.டி.பி. அமைப்பு கேட்டுள்ளது.

பண்டாரவளை புனர்வாழ்வுமுகாம் படுகொலைகளுக்கு கண்டனம் தெரிவித்து இன்று ஈ.பி.டி.பியின் ஏற்பாட்டில் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. இது தொடர்பாக ஈ.பி.டி.பி. விடுத்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-

பண்டாரவளை விந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் 29 உயிர்கள் அநியாயமாக பறிக்கப்பட்டுள்ளன. சிங்கள பௌத்த பேரினவாத வெறியைத் தூண்டும் சக்திகள் மிகவும் குரூரத்தனமாக சுட்டும் வெட்டியும் இந்தத் தமிழர்களின் உயிரைப் பறித்துள்ளன. இந்த முகாமில் படை நடவடிக்கையின்போது கைதானவர்களும் சரணடைந்தவர்களுமென முழுமையாக நிராயுதபாணிகள் தான் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## அரைகுறை எதிர்ப்புக் காட்டுவதைக் கண்டிக்கிறது ரெலோ அமைப்பு

### இன்றைய ஹர்த்தால் குறித்து அறிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.28

பண்டாரவளைப் படுகொலைக்கு அரைகுறை எதிர்ப்புக் காட்டுவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அவ்வாறு செய்வதன் மூலம் போராட்ட சக்திகளை மழுங்கடிப்பதையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இன்று யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஹர்த்தால் குறித்து தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைப்பின் தலைமைக்குழு உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பண்டாரவளைப் பகுதியில் உள்ள புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு ஒரு கட்சியினரால் கேட்கப்பட்டிருந்தது.

மேற்படி படுகொலைக்கு தமிழ்த் தேசிய இனம் தனது பரிபூரண எதிர்ப்பைக் காட்டவேண்டிய நிலையில் உள்ளது.

இப்படுகொலைக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும். அரசாங்கத்தின் பங்காளிகளுக்கு இச்சம்பவத்தைக் கண்டிக்கத் தார்மீக உரிமை கூடக் கிடையாது.

போலியோசொட்டு மருந்து வழங்குவதற்காக இன்றைய தினத்தை ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கையில் விலங்கிடப்பட்டு கட்டிலில் பிணைக்கப்பட்ட நிலையில் கைதிகள்!

கொழும்பு,ஒக்.28

மிருகத்தனமான தாக்குதலின் அதிர்ச்சியிலிருந்து மீளாமல் காயங்களினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் கூட- கையில் விலங்கிடப்பட்டு அதன் ஒரு முனை கட்டிலில் பிணைக்கப்பட்ட நிலையில இளைஞர்கள் காணப்பட்டனர்.

இப்படி மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

தியத்தலாவ இராணுவ முகாமில் அமைந்துள்ள இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் பத்து இளைஞர்களை நேற்று பார்வையிட்ட பின்னர் அவர் இத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் பத்து இளைஞர்களும் கடுங்காயங்களுடன

(10ஆம் பக்கம் பார்க்க)

## மன்னிப்புச்சபை கண்டனம்

லண்டன்,ஒக்.28

பண்டாரவளைப் புனர்வாழ்வு நிலையத்தில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியது என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பு அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அப்பாவிகளான தமிழ்க் கைதிகளை ஆயுதமேந்தியவர்களிடமிருந்து பாதுகாக்க இந்த முகாமில் இருந்த இராணுவத்தினரும், பொலீஸாரும் தவறிவிட்டனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற பெயரில் அப்பாவித் தமிழ் மக்கள் கைது செய்யப்படுவதையும், காரணமின்றி சிறைவைக்கப்படுவதையும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் - என்றுள்ளது. (இ-7)

## தாக்குதலுக்கு புலிகளே காரணம் என்கிறது அரசு

கொழும்பு,ஒக்.28

பண்டாரவளைத் தடுப்பு முகாம் மீதான தாக்குதலை விடுதலைப் புலிகளே திட்டமிட்டு நடத்தியுள்ளனர்.

மேற்கண்டவாறு தகவல் தொழில்நுட்ப, ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று மாலை நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்குடன் புலிகள் இத் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம். அது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம்.

இந்த முகாமை அகற்ற வேண்டும் என்று கோரி அங்கு சுவரொட்டிகள் காணப்பட்டதை அறிவோம்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கமே பொறுப்பு என்கின்றனர் புலிகள்

கொழும்பு, ஒக்.28


பண்டாரவளைத் தடுப்பு முகாமில தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு விடுதலைப் புலிகள் அரசாங்கத்தின் மீது குற்றஞ்சாட்டி உள்ளனர். சம்பவம் குறித்த தமது கண்டனத்தையும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் லண்டன் தலைமைச் செயலகம் பண்டாரவளைப் படுகொலை குறித்து வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பண்டாரவளைத் தடுப்பு முகாமில் இருந்த தமிழ் இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்த அரச படையினர் ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். படையினர் இந்தத் தாக்குதலில் சம்பந்தப்பட்டார்கள் என்பதை நிருபிக்கக் கூடிய ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன.

(10ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளி மாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்கு தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசசேகரம் லோகேஸ்வரி

(ஆங்கில ஆசிரியை, யா/வட இந்து மகளிர் கல்லூரி- பருத்தித்துறை)

பருத்தித்துறை, மாதனையைச் சேர்ந்த இராசசேகரம் லோகேஸ்வரி நேற்று (27-10-2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசசேகரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஈசுரபாதம் - தணிகையம்மா தம்பதிகளின் ஏக புதல்வியும், செல்வி பிரிந்தா (2001A/L மாணவி, வடஇந்து மகளிர் கல்லூரி - பருத்தித் துறை), செல்வி கருணா(2002A/L மாணவி, வடஇந்து மகளிர் கல்லூரி - பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகசேகரத்தின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28-10-2000) காலை11மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத் தித்துறை கோரியடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க.இராமச்சந்திரன்
(சகோதரன்)

*மாதனை,*
*பருத்தித்துறை.* (79964)

## திருமதி கமலராணி உலகேஸ்வரன்

(இளைப்பாறிய விஞ்ஞான ஆசிரியை, இராமநாதன் கல்லூரி)

இணுவிலைச் சேர்ந்த திருமதி கமலராணி உலகேஸ்வரன் 26.10.2000 வியாழக்கிழமையன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் பெ.உலகேஸ்வரன்(பொறியியலாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம் - வவுனியா) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற ச.தம்பிஐயா(மலாயன் பென்சனியர்) - சின்னம்மா ஆகியோரின் அருமை மகளும் காலஞ்சென்ற வை.பெரியதம்பி - கண்மணி ஆகியோ ரின் அன்பு மருமகளும், முரளிதரன்(லண்டன்), திருமதி மீரா முகுந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், வைத்திய கலாநிதி கோ.முகுந்தன் (தேசிய வைத்தியசாலை, கொழும்பு) அவர்களின் அன்பு மாமியாரும், த.தேவராசா (இளைப்பாறிய பிரதி அதிபர், கொக்குவில் இந்துக் கல் லூரி), காலஞ்சென்ற திருமதி தேவராணி சுந்தரலிங்கம், திருமதி தர்மகுணராணி சண்முகலிங்கம், திருமதி. அருந்தவராணி கதிர்காம நாதன், இணுவை சுப்பிரமணியம் (கடவுள், அதிபர் கட்டுடை சைவ வித்தியாசாலை), த.செல்வானந்தராஜா (செல்வம்) ஆகியோரின் அருமைச் சகோதரியும் திருமதி கலைமகள் நடராசா(கொழும்பு) பெ.சிவகடாட்சம் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், வைத்திய கலாநிதி சு.சுதர்சன் (வவுனியா வைத்தியசாலை), திருமதி செ.சுபாஷினி (பொஸ் வானா) ஆகியோரின் அன்புச் சிறியதாயாரும், செல்வி ச.சுபர்ணா, ச.சுகன்யா (மிருக வைத்தியபீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), க.ஆர்த்திகா (யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பெரிய தாயாரும், இ.நிலானி (இணுவில் மத்திய கல்லூரி) அவர்களின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக மகிந்த மலர்ச்சாலையில் (மவுண்டல வவுனியா) வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (29.10.2000) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மவுண்ட் வவுனியா இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
திருமதி சி.தம்பிஐயா
'மீராலயா'
இணுவில் மேற்கு,
இணுவில.

திரு.பெ.உலகேஸ்வரன்,
51A, *காலி வீதி,*
*மவுண்ட் வவுனியா,*
*தெலைபேசி - 01-729583* (79965)

## கந்தர் கணபதிப்பிள்ளை

(விடத்தற்பளை)

விடத்தற்பளையைச் சேர்ந்தவரும், கோண்டாவில் மேற்கை வசிப்பிட மாகக் கொண்டவருமான கந்தர் கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (27.10.2000) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் பூரணத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, கணேசமூர்த்தி, மற்றும் சிவயோகம், சிவனேஸ், பரமேஸ்வரி, சிவராசா (சித்த ஆயுள்வேதவைத்திய உத்தியோகத்தர், வலி.தெற்குப் பிரதேசசபை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற துரைசிங் கம், யோகச்சந்திரன் (களஞ்சியப் பொறுப்பாளர், இ.பொ.ச), துரைசிங்கம் சிவகரன், சைலஜா (சித்த ஆயுள்வேத வைத்திய உத்தியோகத்தர் யாழ்.மாநகர சபை) ஆகியோரின் மாமனாரும், இலக்குமியின் பெரிய தந்தையாரும் தங்கம் (விடத்தற்பளை), ஐயாத்துரை (உசன்), கண்மணி (விசுவமடு) ஆகியோரின் மைத்துனரும் செல்வராணி, புஷ்பராணி, செல்வராசா தேவராசா, யோகராணி, யோகராசா, தவராசா, கஜேந்தினி, இந்திராணி, ஜெயந்தி, ஜனனி, சிவநந்தினி, சுதர்சினி, துஸ்யந்தினி, யாழினி, பாஸ்கரன், ரஜீவன், கமலரூபன், குகவதனி, மதிவதனி, மயூ ரன், வினோஜா, கிரிகரன், சர்மினி ஆகியோரின் பேரனும் கஜானனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2000) சனிக்கிழமை இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.மணிக்கு பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரை யும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

*'காங்கேசன்துறை வீதி,* வைத்திய கலாநிதி க.சிவராசா
*கோண்டாவில் மேற்கு,* (மகன்)
*கோண்டாவில்.* (79966) து.பாலகிருஷ்ணன்(பேபி)

## சின்னத்துரை விசுவலிங்கம்

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த சின்னத்துரை விசுவலிங்கம் நேற்று (27-10-2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - இராசம்மா தம்பதிகளின் மகனும், உடுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னுத்துரை தம்பதிகளின் மருமகனும், செல்வச்சரஸ்வதியின் அன்புக்கணவரும், அசோகன் (பாண்டியன்குளம்), மதிவதனா, மதிரஞ்சனா (பாண்டியன் குளம்), சுதர்சன்(சுதா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், குமுதினி, விக்கினேஸ்வரன் (ஆனைக்கோட்டை), நித்தியானந்தன், துஷ்யா ஆகி யோரின் மாமனாரும், காலஞ்சென்ற தங்கரத்தினம், அன்னலட்சுமி, சத்தியதேவி (சிங்கப்பூர்) காலஞ்சென்ற மகேஸ்வரி, இராசேஸ்வரி காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (பாலன்) ஆகியோரின் அன்புச் சகோ தரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2000) சனிக்கிழமை பி.ப2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

*வேம்பன் வீதி,* தகவல்:
*உரும்பிராய் தெற்கு.* (79967) சுதர்சன்(சுதா)

## கொலை தொடர்பாகக் கைது

நெல்லியடி,ஒக்.28

நெல்லியடி சந்தைக் குத்த கைக்காரர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒரு வரை இருவார காலம் விளக்கமறி யலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ ஏகநா தன் நேற்று உத்தரவிட்டார்.

கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவம் தொடர் பாக விசாரணை மேற்கொண்ட நெல்லியடிப் பொலீஸார், கரவெட்டி மத்தி தச்சன்தோப்பைச் சேர்ந்த அழகராசா - சுதாகரன்(வயது 28) என்பவரைச் சந்தேகத்தின் பேரில் கடந்த வியாழக்கிழமை மாலை கைது செய்திருந்தனர்.

குறித்த சந்தேக நபரை நெல் லியடிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் எச்.ஏ. தகம்பத் நேற்றுக் காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்த சமயம், அடுத்த மாதம் 10ஆம் திகதி வரை, அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(இ-109)

## புலமைப் பரிசில் - 2000

**11** ஆவது பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்றோர்

| | | |
|---|---|---|
| 1) | உ.நிவேதிகா | 166 |
| 2) | நி.ஜனலக்ஷன் | 156 |
| 3) | கு.லஜிந்தன் | 155 |
| 4) | ந.திருத்தணிகன் | 154 |
| 5) | ந.முகுந்தன் | 154 |

அடுத்த பரீட்சை
29.10.2000 (நாளை)

**BOND**

யாழ்.நகர் (79958)

## வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

# அறிவித்தல்

**சங்க எல்லைப்பரப்பிலுள்ள மின் பாவனையாளர்களுக்கு!**

**எமது சங்க இடப்பரப்பிலுள்ள மின்பாவனையாளர்களின் வசதி கருதி மின்சாரக் கட்டணத்தினை கோப்பாய், நீர்வேலி, உரும் பிராய் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள கிராமிய வங்கிகள் மூலம் 30-10-2000 ஆம் திகதி தொடக்கம் சேகரிப்பதற்கு நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே மின்சாரப் பாவனையா ளர்கள் தாம் வதியும் பிரதேசத்திலுள்ள கிராமிய வங்கிகளில் தங்களது மின்சாரக் கட்டணத்தை மு.ப.9.00 மணிதொடக்கம் பி.ப.2.00 மணி வரையும் செலுத்தலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். மேலதிக விவரங்களுக்கு அந்தந்த கிராமிய வங்கி களின் முகாமையாளர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.**

*நீர்வேலி.* (C/13604) -பொது முகாமையாளர்.


## உடன் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள வீடியோ கமரா விற்பனைக்குண்டு.
**(Panasonic 3500m)**
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
**ஐங்கரன் தொலைத்தொடர்பு நிலையம்**
**202, கோயில் வீதி, நல்லூர்.**
T.P:2217
(79943) **(கைலாசபிள்ளையார் கோயில்முன்பாக)**


## யாழ்.நகர்மைய றோட்டரக்ட் கழகத்தின்

ROTARACT CLUB

**க.பொ.த.(சா/த) மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை பற்றிய**

## விசேட அறிவித்தல்

இன்று (28-10-2K) சனி நடைபெறவிருந்த பரீட்சைகள் தவிர்க்க முடி யாத காரணத்தால் இன்று நடைபெறமாட்டாது. நாளை (29.10.2000) ஞாயிறு அறிவித்தபடி விஞ்ஞானம், தமிழ் ஆகியவற்றிற்குரிய பரீட்சை கள் நடைபெறும்.

* பிற்போடப்பட்ட பாடப் பரீட்சைகள்(கணிதம்,சமூகக்கல்வி) பற்றிய அறிவித்தல் நாளைய பரீட்சையின்போது பரீட்சை நிலையங்களில் வைத்து அறியத்தரப்படும். (C/13605)

வல்வெட்டித்துறை மக்கள்
மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரின்
அனுசரணையுடன் நடத்தும்

# மாணவ மணிகளைக் கௌரவிக்கும் மகோன்னத விழா

**இடம்** :- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
**காலம்** :- நாளை (29.10.2000) ஞாயிறு காலை 9 மணி

**புலமைப் பரிசில் பெற்றவர்களையும் மெய்வல்லுநர் போட்டியில் அதிசிறந்த வீரனையும் வாழ்த்திப் பாராட்டி வெகுமதிகள் வழங்கிக் கௌரவிக்கும் சிறப்பு விழா**

i செல்வன் **புஸ்பராசா சிவரூபன்**
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் 182 புள்ளிகள்
வடமாகாண முதன்மை இடம் - அகில இலங்கை எட்டாம் இடம்

ii செல்வன் **பாலேந்திரா வசந்த்**
மெய்வல்லுநர் போட்டியில்
15 வயதுக் குட்பட்ட பிரிவு:
400 மீற்றர் யாழ்.மாவட்டம் -1 ஆம் இடம் - 1999
400 மீற்றர் வடகிழக்கு மாகாணம் - 2 ஆம் இடம் - 1999 (திருமலை)
17 வயதுக் குட்பட்ட பிரிவு:
400 மீற்றர் தேசிய மட்டம் -4 ஆம் இடம் - 1999 (மாத்தறை)
800 மீற்றர் யாழ்.மாவட்டம் -1 ஆம் இடம் - 2000

iii **ஜெயவீரசிகாமணி பிரகதீஸ்** 174 - கெருடாவில் இ.த.க.பாடசாலை
iv **சிவசுப்பிரமணியம் பிரகலாதன்** 166 - வல்வை மகளிர் ம.வி.
v **வாமதேவன் நிலானியா** 161 - வல்வை அ.மி.த.க. பாடசாலை
vi **பாலகுரு கலாதீபன்** 147 - வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
vii **இரத்தினசிங்கம் ரஞ்சித** 143 - வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
viii **குலராசா அனிதா** 137 - வல்வை மகளிர் மகாவித்தியாலயம்

விழாத் தலைவர்
**திரு. M.K.சிவாஜிலிங்கம்**
வல்வை நகரபிதா

நிகழ்ச்சி இணைப்பாளர்
**டாக்டர் க.மயிலேறும்பெருமாள்**
தலைவர் வைத்தியசாலை அ.சபை

### பாராட்டி வாழ்த்தும் பெரியோர்

**திரு. S.சிவராசா**
வடவலயக் கல்விப் பணிப்பாளர்.

**திரு. V.K. கணேசலிங்கம்**
பேராசிரியர், யாழ்.பல்கலைக்கழகம்,

**திரு. A.சிவசுவாமி**
பிரதேச செயலர், பருத்தித்துறை.

**திரு.S.ஸ்ரீநிவாசன்**
பிரதேச செயலர், கரவெட்டி.

**திரு.P.வேலாயுதபிள்ளை**
உதவி அரசாங்க அதிபர்,
மருதங்கேணி.

**திரு.N.மகேந்திரன்**
உதவித் திட்டமிடல் பணிப்பாளர்,
பருத்தித்துறை.

காலை 9 மணிக்கு கதாநாயகக் குமாரர்கள், மக்கள் புடைசூழ, மங்கள வாத்தியங்கள் அணிசேர, ஊர்வலமாக வல்வைச் சந்தியிலிருந்து வித்தியாலயத்துக்கு அழைத்து வரப்படுவர். ஆர்வலர்கள் அனைவரும் வாடைக் காற்றுக் கடல் போல அலையலையாகத் திரண்டு வந்து குமாரர்களை வாழ்த்திப் பாராட்டுங்கள்.

பரிசில்கள், புத்தகங்கள் வழங்கவிரும்பும் அன்பர்கள் மேடையிலேயே தாராளமாக வழங்கிக் கௌரவித்தல் மிக நன்று.

(79928)



ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின முயற்சியால் பிரமாண அடிப்படை நிதி மூலம் இரண்டரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய கட்டடம் அண்மையில் சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையில் திறந்துவைக்கப்பட்டது.

இதனை வலிகாமம் பிரதேசசபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான ந.திரிலோகநாதன் திறந்துவைத்தபோது எடுத்த படம். (ஐ-ஒ)

# அரசியல் தீர்வுக்கு பாப்பரசரின் தலையீட்டை கோரும் பிரேரணை

## வத்திக்கான் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு,ஒக்.28

இலங்கை இனப்பிரச்சினைக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதற்கு புனித பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் தனது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்று வத்திக்கானில் நடைபெறவுள்ள உலக நாடாளுமன்ற சங்க மாநாட்டில் பிரேரணை ஒன்று கொண்டு வரப்படவுள்ளது.

நவம்பர் 3ஆம் திகதி நடைபெறும் இந்த மாநாட்டில் இலங்கையிலிருந்து கலந்துகொள்ளும் ஐ.தே.கவின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா மேற்படி பிரேரணையை கொண்டுவரவுள்ளார்.

பாப்பரசர் 2ஆவது அருளப்பர் சின்னப்பர் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் உலகெங்கும் இருந்து 2 ஆயிரம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரண்டாயிரம் ஆண்டை ஒட்டிய பொன்விழாக் கொண்டாட்டங்களைக் குறிக்கும் வகையில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள மக்களின் துயரங்களைப் போக்க உதவ வேண்டும் என்றும் டாக்டர் ஜெயலத் போப்பாண்டவரிடம் கோரவுள்ளார்.

இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் அனைத்து உலக நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் இலங்கையில் அரசியல் தீர்வைக கொண்டு வருவதற்கு தூண்டுதல் அளிக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுக்கவுள்ளார்.

இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கவிருக்கும் தீர்மானங்களின் பிரதிகளை பதிவு செய்யும் பொருட்டு கொழும்பிலுள்ள வத்திக்கான் தூதுவரிடம் கையளித்துள்ளார்.

இந்தப் பிரதிகளில் ஒன்று கொழும்பு அதிமேற்றிராணியார் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்ணாண்டோவிடமும் கையளிக்கப்பட்டுள்ளது.

# மாபிள் பீச் பகுதியில் தேடுதல் தொடர்கிறது

கொழும்பு,ஒக்28

திருகோணமலை மாபிள் பீச் பகுதியில் பொலீஸாரும் இராணுவத்தினரும் இணைந்து விடுதலைப்புலிகள் உறுப்பினர்களை தேடி அழிக்கும் நடவடிக்கையில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இந்த நடவடிக்கையின் போது 2 புலிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்றும் மோட்டார் பீரங்கியுடனும், ஆயுதத்துடன் காணப்பட்ட மற்றும் ஒரு புலிச் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் தேடி அழிக்கும் நடவடிக்கை தொடர்ந்து நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-ரி)

## தேர்தலில் வெற்றியீட்டியதற்காக

# ஆளும் கட்சி தேசியப் பட்டியல் எம்.பி. கதிர்காமத்தில் அங்கப் பிரதிஷ்டை

கொழும்பு,ஒக்.28

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா கடந்த வாரம் கதிர்காமம் புனித ஆலயத்தில் அங்கப் பிரதிஷ்டை செய்து நேர்த்திக் கடனை நிறைவேற்றிக் கொண்டார்.

தேங்காய் ஒன்றை இரு கரங்களிலும் ஏந்திக்கொண்டு மாணிக்க கங்கைக் கரையில் இருந்து ஆலயத்தைச் சுற்றி வெறும் கௌபீனத்தோடு முருகன் ஆலயத்தை அங்கப் பிரதிஷ்டை செய்து மாணிக்க கங்கையில் மூழ்கிப் பின்னர் மீண்டும் முருகன் ஆலயத்திற்கு வந்து தேங்காய் உடைத்துத் தனது நேர்த்திக் கடனை முடித்துக் கொண்டார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றி பெற்றால் தான் இந்த அங்கப் பிரதிஷ்டையைச் செய்வதாக நேர்த்திக்கடன் வைத்திருந்ததாக மேர்வின் சில்வா கூறியுள்ளார். (ஐ-ரி)

## ஐஸ்கிறீம் சாப்பிட்டவர்கள் ஆஸ்பத்திரியில்

அம்பாறை,ஒக்.28

கல்முனை நகரில் நேற்று முன்தினம் ஐஸ்கிறீம் சாப்பிட்ட 28 பேர் கல்முனை ஆதார ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் ஐவர் சிறுவர்கள்.

ஐஸ்கிறீம் சாப்பிட்டதால் திடீரென ஏற்பட்ட வயிற்றுவலி, வயிற்றோட்டம் காரணமாகவே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை -

கல்முனைப் பகுதியிலுள்ள சகல ஐஸ்கிறீம் விற்பனை நிலையங்களையும் தற்காலிகமாக மூடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஐஸ்கிறீம் வகைகளை இரசாயனப் பரிசோதனைகளுக்காக கொழும்புக்கு அனுப்பியுள்ளதாகவும், சுகாதாரப் பிரிவினர் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக்.28

உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத்தால் வெளியிடப்படும் 'வித்தகம்' நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி காலை 10 மணிக்கு நிறுவனத்தின் மண்டபத்தில் இடம்பெறும். (இ-8)

## லொறி இடித்து ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஒக்.28

பின்பக்கமாக வந்த லொறி மதிலை இடித்ததினால் அதில் நெரியுண்டு ஒருவர் படுகாயமடைந்தார். மதிலும் உடைந்து சேதமானது.

யாழ்ப்பாணம் பெருமாள கோயில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் லொறிக்குள் கல் ஏற்றிக்கொண்டு நின்றவரான நடராசா ஞானசேகரம் (வயது 26) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-10-15-139)

# ஆசிரியர்களுக்கு ஆறு மாத ஊக்குவிப்புக் கொடுப்பனவு

## இம்மாதச் சம்பளத்துடன் கிடைக்கும்

யாழ்.மாவட்ட ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் ஒக்ரோபர் மாத சம்பளத்துடன் வழங்கப்படவுள்ளன.

கடந்த வருடத்தின் இறுதி ஆறு மாத காலத்துக்குமான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளதால அதனை இந்த மாதச் சம்பளத்துடன் சேர்த்து சகலருக்கும் வழங்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

ஆசிரியர்களுக்கு 10 மாதகால மாக இடர்கடன் வழங்கப்படவில்லை எனவும் இதற்கான நிதியை பிரதம கணக்காளரிடம் பெற்று கடனுக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கு வழங்க வலயக் கல்விப் பணிப்பாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் -

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ-ரி-10)

## மின்மாற்றி தகர்ப்பு

திருகோணமலை,ஆண்டான்குளம் பகுதியில் அமைந்திருந்த மின்மாற்றி ஒன்று கடந்த புதன் இரவு 7.50 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

இந்தக் குண்டுத்தாக்குதல் காரணமாக மின்சார சபைக்கு ரூபா 4 லட்சம் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தை அடுத்து ஆண்டான்குளம் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.(இ-7-145)

# பேச்சுக்கு புலிகள் தயாரில்லை; அதுவே இன்றைய பிரச்சினை

## கதிர்காமர் பேட்டி

சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்கு விடுதலைப் புலிகள் தயாரில்லை என்பதே இன்றைய பிரச்சினை.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பாங்ஹொக்கில் வைத்து 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய பேட்டியிலே அவர் இவ்வாறு கூறினார்.

ஜப்பானிலிருந்து நாடு திரும்பும் வழியில் பாங்ஹொக்கில் விமானம் தரித்து நின்றபோது அவர் இந்தப் பேட்டியை வழங்கினார்.

இனப்பிரச்சினைக்கு நிச்சயம் தீர்வு காணப்படவேண்டும் என்பது இலங்கை அரசின் நிலைப்பாடாகும். ஆனால் விடுதலைப் புலிகளுக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எந்தவித அக்கறையும் இல்லை. -

படைப்பலத்தைக் கொண்டு தனி நாட்டை அடைந்துவிட முடியும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவ்வாறு நினைப்பதன் மூலம் அவர்கள் மாபெரும் தவறைப் புரிகிறார்கள். சமாதானப் பேச்சுவார்த்தைகளில் புலிகள் அக்கறை காட்டுவார்கள் என்பது வெறும் பகற்கனவாகும். -

சமாதான நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்படாமலிருப்பதற்கு புலிகளே காரணம். பேச்சுக்களில் பங்குபற்ற புலிகள் தயாராக இல்லை என்பதே தற்போதைய பிரச்சினையாகும் -

சமாதான பேச்சுக்களில் புலிகள் பங்குபற்ற விரும்பினால் நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதை தாங்கள் ஆதரிப்பதாக அவர்கள் நிரூபிக்க வேண்டும் -

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக விடுதலைப் புலிகள் தங்களது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாது விடில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தொடர்ந்து யுத்தத்தை நடத்துவதைத் தவிர வேறுவழியில்லை -

என்று அமைச்சர் தமது பேட்டியில் சொன்னார். (அ-5)

## பண்டாரவளையில் பதற்றம் நீடிப்பு

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் கடந்த புதனன்று தமிழ்க் கைதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து பண்டாரவளையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பெரும் பதற்ற நிலை காணப்படுகிறது.

அச்சம் காரணமாக இப்பகுதியில் தீபாவளிப் பண்டிகை சோபிக்கவில்லை என்றும் இங்குள்ள தமிழர்கள் அச்சம் கலந்த பீதியுடன் காணப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதி தமிழர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று பண்டாரவளை நகரசபை பிரதித் தலைவர் ரகுபதி நடராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.(இ-5)


ஓம் கணபதி துணை

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் ஐப்பசித் திங்கள் 14 ஆம் நாள் (30.10.2000) திங்கட்கிழமை காலை 9.30 மணிமுதல் 10.30 மணி வரையுள்ள அனுஷ நட்சத்திரமும் சித்தயோகமும் திரயோதசித் திதியும் கூடிய தனுலக்கின சுப முகூர்த்த வேளையில்

எமது மகன்
திருநிறை செல்வன்
**தர்மகுலசிங்கம்**
(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தெல்லிப்பழை)
அவர்களுக்கும்

எமது மகள்
திருநிறை செல்வி
**விமலலோஜினி**
(ஆசிரியை, யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி)
அவர்களுக்கும்

சிவசக்தி திருவருள் துணையுடன் யா/தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி தொடர்ந்து அங்கு நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**விருந்துபசாரம்:- 31.10.2000 செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு மணமகன் இல்லத்தில் இடம்பெறும்.**

(இருவீட்டார் அழைப்பு)

திரு.திருமதி த.இராசு தம்பதிகள்
கட்டுவன் மேற்கு,
தெல்லிப்பழை.

திரு.திருமதி இராஜதுரை,
ஜெயமுகானந்தன்
எச்சாட்டி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

(79915)



# வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்



எமது சங்கத்தின் உபதலைவரும்,
சிறந்த சமய, சமூக சேவையாளருமாகிய

உயர்திரு.க.வாமதேவன்

அவர்கள் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதனையிட்டு அவர் தம் சேவை மேலோங்கி வளமுடன் வாழ எல்லாம் வல்ல விசுவத்தனை வேலவனை வேண்டுவதுடன் அவரை மனதார வாழ்த்துகின்றோம்.

பண்ணாகம்,
சுழிபுரம்

பண்ணாகம் ஸ்ரீ முருகன்
இந்து சமய விருத்திச் சங்க நிர்வாகம்

(79843)

## அறிவித்தல்

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் 1999 ஆடி மாதத்தில் இருந்து 2000 வைகாசி வரை தொடர்ச்சியாகத் தொழிற் பட்டபோதிய சேமம் உள்ளவர்களுக்கு சேமப்பணத்தில் இருந்து ரூபா இரண்டாயிரம் சேமத் திருப்பமாக எமது அச்சுவேலியில் அமைந்த தற்காலிகக் காரியாலயத்தில் வழங்கப்படும்.

| வழங்கப்படும் திகதி | கிளை இல. |
|---|---|
| 29-10-2000 | 194, 295, 196, 197, 198, 200, 201, 202, 203, 204, 206. |
| 30-10-2000 | 184, 184, 185, 186, 187, 188, 189, 190, 191, 192, 193. |

தலைவர்,
சாவகச்சேரி ப. தெ. வ. அ. கூ. சங்கம்.
(79936)

குப்பிளான் சொக்கவளவு சோதி விநாயகர் ஆலய

## மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீட்டு விழா

இடம்:- குப்பிளான் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய மண்டபம்

காலம்:- (29-10-2000)ஞாயிறு பி.ப.2மணி

தலைவர்:- திரு. ஆ. மகாலிங்கம் (வலி. தெற்கு பிரதேச செயலர் – காப்பாளர், சோதிவிநாயகர் ஆலய பரிபாலன சபை)

வெளியீட்டுரை:- திரு. மு. திருநாவுக்கரசு (இளைப்பாறிய நீதிபதி)

ஆய்வுரை:- கவிஞர் திரு. சோ. பத்மநாதன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

சிறப்புரைகள்:- சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் (உப-அதிபர் – பலாலி ஆசிரியர் கலாசாலை)
ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் (செயலாளர், பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபை)
திரு. சி. சக்திகிரிவன் (கிராம அலுவலர்) (செயலாளர், இந்து சமயப் பேரவை)

இவ்விழாவில் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்.

குப்பிளான்.
27—10—2000 (79952)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வைத்திலிங்கம் தையல்நாயகி

யாழ்ப்பாணம், பிறவுண் வீதி, 161 ஆம் இலக்கத்தில் வசித்தவரும், தற்சமயம் தெகிவளை, 2 ஆம் ஒழுங்கை, 53 ஆம் இலக்கத்தில் வசித்த வருமான திருமதி வைத்திலிங்கம் தையல்நாயகி காலமாகிவிட்டார்.

அன்னார் யாழ்ப்பாணம், நீராவியடி காலஞ்சென்ற அண்ணாமலை வைத்திலிங்கம் அவர்களது மனைவியும், காலஞ்சென்ற பொன்னுத்துரை செல்லத்துரையினதும் பெண் வள்ளியம்மாளினதும் மகளும், ஜயனார் கோயிலடி காலஞ்சென்ற துரையப்பா அண்ணாமலையினதும் பெண் சரஸ்வதியம்மாவினதும் மருமகளும், கணேசலிங்கத்தின் தாயாரும், செல்வநாயகியின் மாமியும், சுதர்சன், வசந்தன், ரேணுகா, சுமங்கலா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் இன்று (28 - 10 - 2000) சனிக்கிழமை பி. ப. 4. 00 மணிக்கு நடைபெறும்.

தகவல்
சகோதரி
திருமதி நா. சண்முகநாதன்.

110, அரசடி வீதி.
யாழ்ப்பாணம். (79938)

## தாமோதரம்பிள்ளை சிவசுப்பிரமணியம்

(சைவம்)

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (27-10-2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், சுகுமாரின் அன்புத் தந்தையும், பவானியின் (ஆசிரியர், பிரம்பற்று கலைமகள் வித்தியாலயம்) மாமனாரும், பிரணவன், பிரணவி, சிவசுதன் ஆகியோரின் பேரனும், மகேஸ்வரி (லண்டன்), அருளானந்தம் (இளைப்பாறிய ஆசிரியர், மாத்தளை), காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற சரவணமுத்து, நடராஜா சிங்கம் (மாத்தளை) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (28-10-2000) சனிக்கிழமை காலை 11·00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுகுமார் (மகன்),
மகேஸ்வரன் (மாமப்பம்)
(மருமகன்)

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (79948)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 28
கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழக சிறுவர் பாடசாலை மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு இடம்பெறும்.

கழகப் போஷகரும், மேலதிக அரச அதிபருமான துரை வைத்திலிங்கம் கழகக் கொடியை ஏற்றி வைப்பதுடன் ஆரம்பமாகும் இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக முன்னாள் கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் இ. மகேந்திரனும், சிறப்பு விருந்தினராக கொக்குவில் வட-கிழக்கு கிராம சேவையாளர் எஸ். சூரியகுமாரும் கலந்து கொள்வர்.
(இ-3)

## கந்தசஷ்டி காலங்களில் கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 28
இன்று ஆரம்பமாகும் கந்தசஷ்டி விரதத்தை யொட்டி விசேட கதாப்பிரசங்கம் இன்று முதல் எதிர்வரும் வியாழக்கிழமை வரை தினமும் 5 மணி முதல் 5. 45 மணி வரை நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவிமணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரசங்க பூஷணம் நடேசன் சிவசண்முகமூர்த்தி ''கலியுக மும் கந்தன் கருணையும்'' என்னும் தலைப்பில் பக்க வாத்திய சகிதம் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.
(இ-3)

## நூல் வெளியீடு: திங்களன்றே நடைபெறும்

யாழ்ப்பாணம், ஒக்.28
இன்று நடைபெறவிருந்த யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி எழுதிய 'கந்தபுராண வசனகாவியம்' நூல் வெளியீட்டு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக இந்து சமயப் பேரவை அறிவித்துள்ளது.

வெளியீட்டு விழா நாளை மறுதினம் பிற்பகல் 2 மணிக்கு சத்திரத்துச்சந்தி ஞானவைரவர் தேவஸ்தான முன்றலில் நடைபெறும். (அ)

## பத்திரிகையாளர் சங்க அவசரக் கூட்டம்

வடமராட்சி, ஒக். 28
வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் அவசரக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொட்டடியில் நடைபெறும்.

அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் எஸ். கதிர்காமத்தம்பி அறிவித்துள்ளார்.
(இ-173)

## நாளை நடப்பவை

கொழும்பு, ஒக். 28
அரசாங்க குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் சங்கத்தின் 25 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெறும். (இ-8)

* * *

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடத்தும் சைவப்புலவர், இளஞ் சைவப் புலவர் தேர்வு பற்றிய கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் சங்கத் தலைவர் சைவப்புலவர் சு. செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.
(135)

## திறப்பு விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 28
இன்று நடைபெறவிருந்த அளவெட்டி கிழக்கு கும்பழை பொது மண்டபத் திறப்பு விழா தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டு எதிர்வரும் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (இ-3)

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம் விசேட பொதுச்சபைக் கூட்டம்

இன்று 28—10—2000 சனிக்கிழமை நடைபெற இருந்த எமது வணிகர்கழக விசேடபொதுச் சபைக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் 04-11-2000 அன்று சனிக்கிழமை பி.ப. 3-00 மணிக்குப்பிற்போடப்பட்டுள்ளது என்பதனைச் சகல பொதுச் சபை உறுப்பினர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

இல. 165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (சி/13602)

## முதலாமாண்டு நினைவலைகள்



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 31 | 09 |
| — | — |
| 07 | 11 |
| — | — |
| 1968 | 1999 |

## செல்வி ஜெயஸ்ரீ கணபதிப்பிள்ளை

(B. Sc.)

திதி:- 28—10—2000

அன்பே ஆருயிரே அறிவின் திருவுருவே!
கனவுகள், கற்பனைகள்
தொடராய் கொண்டிருந்தாய்
கண்ணின் கருமணியாய் எம் முன் நீ இருந்தாய்
கண்ணின் காட்சி நீங்கி கனவானாய்
ஆண்டவன் அடி சேர்ந்து ஆண்டொன்று ஆனாலும்
ஆறாதுயர் ஆறாது வருந்துகின்றோம் நாமே!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்
தாய்,
சகோதர, சகோதரிகள்.

தும்பளை - மேற்கு,
பருத்தித்துறை. (79802)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
## சிதம்பரநாதர் சின்னாச்சிப்பிள்ளை

மலர்வு: 13 - 11 - 1932
உதிர்வு: 28 - 09 - 2000

இன்று (28 - 10 - 2000) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பாக அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

கரம்பக்குறிச்சி,
வரணி. (79945)

# இந்த வார இராசி பலன்

## 28-10-2000 - 03-11-2000

### மகாதேவா ஜோதிடம்

| | | | |
|---|---|---|---|
| | சனி | வியா | ரா |
| | இராசிச் சக்கரம் | | |
| கே | வெ | சந் ▼ சூ | செ புத |

**28-10-2000 இல் சுவாதி நட்சத்திரம் துலாம் இராசியில் நிற்கும்.**

அரசியலில் தொடர்ந்து ஒரு தளம்பல்நிலை இருந்தபடி இருக்கும். யுத்தம் தொடர்ந்த படி இருக்கும். மக்கள் சலிப் படைவார்கள். வெளிநாடுகளிலிருந்து உதவிகள் கிடைக்கும். இந்தியாவில் வடக்கில் போர் நிலை உருவாகும். தெற்கில் சமாதானச் சூழ்நிலையை உருவாக்க ஆக்க பூர்வமான செயற்பாடுகள் ஏற்படும். அமெரிக்கா இந்தியாவுக்கு உதவிகள் செய்யும். மத்தியகிழக்கில் விட்டு விட்டு யுத்தமேகம் கருக்கூடும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

## மேடம்

மனிதர்கள் செய்யும் தவறுகள் என்றோ ஒருநாள் வெளிப்படத்தான் வேண்டும். சோதனை, வேதனை, இடமாற்றம் எல்லாம் மாறி மாறி இவ்வுலகில் நடந்தபடிதான் இருக்கின்றன என்பதை மறக்காமல் செயற்படுங்கள். தொழில் ஸ்தானத்தில் போட்டிகளுக்கு மத்தியில் அரைமனததுடன் செயற்படுவீர்கள். நண்பர்களுடன் விரோதிப்பீர்கள். பொருள் பொறுப்பொன்றில் மனப் பயம் ஏற்பட இடமுண்டு. தாய்வழியினருடன் கருத்து வேற்றுமை வரும். சிலருக்கு காணி, பூமி சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் வர இடமுண்டு. உரசல் காயங்கள், வயிற்று நோ, வாய்வுத் தொல்லை, வயிற்றோட்டம் என்பன வரலாம். சட்டத்துறை, வியாபாரம், ஆசிரியத்துறை, விவசாயத்துறை, எண்ணெய்த்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

## இடபம்

மனிதர்கள் ஒரு நம்பிக்கையில்தான் வாழுகின்றார்கள்; நம்பிக்கையும், கவர்ச்சிகளும் இல்லாவிட்டால் வாழ்க்கையே வெறுத்து விடும். எப்படியிருந்தாலும் பொருள் சிறப்பு இல்லாவிடில் எதிலும் ஒரு பிடிப்பு இருக்காது. எல்லாம் ஒரு நடுநிலையில் இருந்தால்தான் தளம்பல்நிலையற்ற வாழ்வில் ஒரளவு மன நிறைவுடன் வாழ முடியும். எனவே உழைப்பில் ஊக்கமாக இருந்து தொழில் சிறப்பை அடைய முயலுங்கள். எதிரிகளை அடக்கி விடுவீர்கள். கோயில் வாசல் கடந்து வருவீர்கள். பொருள் வரவு ஏற்படும். சிறுநீரக வருத்தம், தொண்டை வருத்தம், சலவருத்தம் என்பன வரும். ரீ.வித்துறை, கொம்பியூட்டர் வேலைகள். வியாபாரத்துறை, செய்தித்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் ஏற்படும். கீரை வகைகள், சிறுகுறிஞ்சா, வல்லாரை, கரட் போன்றவைகளை உணவில் சேர்த்து வாருங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

## மிதுனம்

தன் தவறுகளை மறைக்க, தான் செய்யும் தவறுகளை மற்றவர்கள் மீது திணித்துக் குற்றஞ் சுமத்தி வருபவர்கள் அநேகர்கள் இவ்வுலகில் இருக்கின்றார்கள். இதே போன்ற அனுபவம் தொழில் ஸ்தானத்தில் உங்களுக்கு நேர இடமுண்டு. உழைப்பில் அலட்சிய மனோபாவம் இருக்கச் செய்யும். எனவே குறைகேட்க நேரிடும். கவனமாக இருக்கவும். அரச அதிகாரிகள், அரசியல்வாதிகளின் ஆதரவுகள் இருக்கச் செய்யும் எதிர்ப்பாலாரின் உதவிகள் கிடைக்கும். குடும்பத்தினர்களின் நன்மைகளுக்காக பல பொறுப்புக்களை ஏற்பீர்கள். அடிகாயங்கள், குடல்உபாதை முதுகுவலி. மலச்சிக்கல், பித்த நோய்கள் என்பன வரும். எண்ணெய்த்துறை, ஹோட்டல்துறை, குருத்துறை, எழுத்துத்துறை, அரசியல்துறை போன்ற துறையினர்கள் முன்னேற்றம், மாற்றம் அடைவார்கள். முருங்கை வறை, முடக்கொத்தான் ரசம், வாழைப்பழங்கள் என்பன சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

## கடகம்

இன்று உலகில் பாசம் கூடிய பதிகளே (உயிர்களே) அதிகமாக உள்ளன. நீங்கள் வேசம்போட்டவர்களை அதிலிருந்து அறிந்து நேசம் கொண்டு வாழுங்கள். நன்மைகள் ஏற்படும் அயலவர்கள் தொழில் பீடத்து நண்பர்களுடன் அனுசரித்துக் கருமமாற்றுங்கள் தூரத்துச் செய்திகளால் மன ஆறுதல் ஏற்படும். உறவினர்களின் கலகலப்பு இருக்கும். நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வீர்கள் துக்கமும். சந்தோஷமும் வாழ்வின் இரட்டைக் குழந்தைகள் என்பீர்கள் நண்பர்கள் தேடிவருவர். நாரிப்பிடிப்பு, கைகால் மூட்டுவலி, வயிற்றுப்பொருமல், இரத்த அழுத்தம் என்பன வரும் பாதுகாப்புத்துறை. ஹோட்டல்துறை, ரீவித்துறை, இசைத்துறை, ஆசிரியத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்:- சனி, திங்கள், வியாழன்.

## சிங்கம்

கடினமான பாதையில் பல தியாகங்களைச் செய்து நடந்து சென்றுதான் எக்காலங்களிலும் தமது இலட்சியங்களை நல்லவர்கள், வல்லவர்கள் அடைகின்றார்கள். எனவே தொழில் ஸ்தானத்திலும் உங்களுக்குப் பல சோதனைகள் ஏற்படலாம் கவனமாக இருந்து மெதுமையாகச் சென்று வாருங்கள். குடும்பத்தில் பலவிதக் கருத்து மாற்றம் நடக்கும். தொழில் ஸ்தானத்தில் புதிய மாற்றங்கள் கொடுக்கும். மனப்போராட்டம் வந்து போகும். உஷ்ணபீடைகள், கண்நோய் அல்லது கூச்சம், கால் உளைவு, வாய்வுத் தொல்லைகள் என்பனவரும். செய்தித்துறை, இசைத்துறை, மருந்துத்துறை, நகைத்துறை, புடைவைத்துறை. குருத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்:- சனி, வியாழன்.

## கன்னி

மனிதர்கள் வளைந்து குழைந்து கருமமாற்றலாம்; ஆனால் வளைந்து குழைந்த காணிகளிலும், முக்கோணக் காணிகளிலும் எவரும் குடியிருப்பதைத் தவிர்த்துக் கொள்ளவும். நீள்சதுரக் காணிகளில் அவரவர் நட்சத்திரத்திற்கு பொருத்தமான வாசல்களில் அமைந்த வீடுகளில் குடியிருந்தால்தான் சிறப்பான வாழ்வு அமையும். அதே போன்று தொழில் ஸ்தானத்தின் அமைவுகளும் இருக்க வேண்டும். அதனால் உங்கள் பொருள் வளம் அதிகரிக்கும். உறவினர்களின் உதவிகள் கிடைக்கும் காலமாகும். சளித் தொல்லை, மூலச்சூடு, கிருமித்தாக்கம், கைகால் உளைவு, வாய்வுத் தொல்லைகள் என்பன கொடுக்கும். போக்குவரத்துத்துறை, குருத்துறை, கொம்பியூட்டர் துறை, வியாபாரம், விவசாயத்துறை தொடர்பான வர்களுக்கு அதிக இலாபங்கள் கிடைக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்:- சனி, வியாழன், வெள்ளி.

## துலாம்

நாடு அமைதி காண வேண்டுமாயின் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். நாடு செழிக்க வேண்டுமாயின் நல்லவர்கள், புத்திஜீவிகள், தெய்வீகம் நிறைந்தவர்கள் காப்பாற்றப்படல் வேண்டும். எனவே நல்லதைச் சொல்லி, நன்மைகளைச் செய்து வாழ்வதிலே நாம் கருத்தாக இருப்போம். எனவே நீங்களும் நல்லவற்றைச் செய்து வாருங்கள். பிறரை வாழவைக்கப் போராடுவீர்கள். இட மாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். எதிர்ப்பாலாருக்கு ஆலோசனை கூறுவீர்கள். தொழிலால் வரவுக்கள் அதிகரிக்கும். குடும்பப்பற்றால் பலகருமங்களைச் செயற்படுத்துவீர்கள். நண்பர்கள், நல்லவர்களுக்குப் பல உதவிகளைச் செய்வீர்கள். நரம்புச்சோர்வு, வயிற்றுநோ, மனப்போராட்டம் என்பன வரும். வெந்தயம், வல்லாரை சாப்பாட்டில் சேர்த்தால் நன்று. ஆசிரியத்துறை, வியாபாரத்துறை, சட்டத்துறை போன்ற துறையினர்கள் நற்பலன் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்:- சனி, வியாழன், வெள்ளி.

## விருச்சிகம்

அறிய முடியாத பாசம் நிரம்பிய உயிர்களை தெய்வீக வாசம் பொருந்தியவர்களால் மாற்ற முடியாதா? ஏன் முடியாது? போராடும் உலகில் தேவாரம் என்ன செய்யும் எனக் கேட்கின்றார்கள்? அனுஷநட்சத்திரக் காரரைக் கேட்டால் அதன் அர்த்தம் புரியும். எனினும் பாடுபட்டுச் செய்யும் தொழிலில் பல இலாபங்கள் வந்துகொண்டிருக்கும். நண்பர்கள் உதவிகள் செய்து தருவார்கள். கேட்டைக்காரர் போராட்டம் நிறைந்தவர்கள். எனினும் அவர்களை இலேசில் எவரும் வெல்ல முடியாது. கற்பனை அதிகம் உங்களுக்கு. ஓடி ஓடி ஆலோசனை சொல்லுவீர்கள். சங்கீத நாட்டம் அதிகமாகும். ஒலி ஒளிக்கருவிகளில் அதிககாலம் செலவு செய்வீர்கள். தொண்டை வருத்தம், கண்நோ, சிரசு நோ, கிருமித்தாக்கம், நாரி நோ, இரத்தவருத்தங்கள் வர இடமுண்டு. சட்டத்துறை, இரும்புத்துறை, மருந்துத்துறை, கோவில்துறை போன்ற துறையினர்களுக்கு அதிக மாற்றங்களும் நன்மைகளும் ஏற்பட்டபடி இருக்கும். வல்லாரை, பொன்னாங்காணி, கீரை வகைகளைச் சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளவும்.

★ அதிர்ஷ்டநாள்:- சனி, வியாழன், வெள்ளி

## தனுசு

அன்பு எங்கும் பரவிப் பிரகாசிக்க வேண்டும். மக்கள் உழைத்து வாழவேண்டும். எல்லோரது உரிமைகளும் தானாகக் கிடைக்கும். இதைத்தான் உங்களைப் போன்ற நற்சிந்தனை உள்ளவர்கள் விரும்புகின்றார்கள். இருப்பினும் நீங்கள் உங்கள் தொழில ஸ்தானத்தில் கவனமாக இருந்து செயற்பட்டு உழைப்பை அதிகரிப்பீர்கள். அடிக்கடி வாக்குவாதம், போட்டிகள் வரச்செய்யும், நண்பர்கள், உறவினர்கள், உதவிகள் செய்வார்கள், அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். எதிர்ப்பாலாருடன் வாக்குவாதம் வரலாம் முதுகு நோ, உரசல்காயங்கள், இடுப்புநோ, வயிற்று வருத்தம், வாய்வுத்தொல்லை என்பன வரலாம். கறி முருங்கையிலை, பருப்புவகை சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளவும். கடல்துறை, போக்குவரத்துத்துறை, மருந்துத்துறை, நகைவேலை, பாதுகாப்புத்துறை போன்ற தொடர்புடையவர்களுக்கு அதிக மாற்றங்கள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள் - சனி, திங்கள், வியாழன், வெள்ளி.

## மகரம்

இடம் மாறும் பொழுதும் புதிய வீடுகளை வாங்கும் பொழுதும் கவனமாக இடங்களைப்பார்த்துவாங்க வேண்டும் அல்லது அதனால் துன்பங்கள்தான் அதிகரிக்க இடமுண்டு. வடக்கு, கிழக்கு வாசலுள்ள வீடுகளில் சிறப்பும்—தெற்கும் மேற்கும் வாசலுள்ள வீடுகள் துன்பம் தருவது எனக்கருதுகிறார்கள். அவரவருக்கு பொருத்தமான வாசல்களில் வாழ்வதுவே சிறப்பைத்தரும். மனையைப் போல் மக்கள் உதவ மாட்டார்கள் எனச் சொல்லும் இரகசியம் இதிலடங்கியுள்ளது. எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமை வரலாம். மாற்றங்கள் சகஜம். வாகன சுகம் தேடிவரும்- எதிரிகளால் மனவேதனை வரலாம். நரம்பு வருத்தம், மனக்குழப்பம், தோல்வருத்தம், மூட்டுநோ, தலைவலி என்பன வரலாம். மச்சவகை, கீரைவகைகளை அதிகமாகச் சேர்த்துக் கொள்ளவும். இதனால் உடலுக்கு நன்மைகள் உண்டு. போக்குவரத்துத்றை, ரீ.வி, இசைத்துறை, புடைவை, நகைத்துறை, சாப்பாட்டுக்கடை, வியாபாரம் போன்றவர்களுக்கு வருமானம் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்டநாள்: — சனி, திங்கள், வியாழன், வெள்ளி.

## கும்பம்

கோயிக்கு உள்ளே பக்தியும் — வெளியே சக்தியும் பெறவேண்டும். அதாவது அறிவுச்சக்தி இக்கருமம் பல கோயில்களில் நடைமுறைப் படுத்தப்பட்டுவருவது கண்கூடு இருப்பினும் வருமானத்தை அதிகரிப்பதில் கவனமாக இருங்கள். இடைக்கிடை பணக் கஷ்டங்கள் வரச் செய்யும். தூரதேசத்திலிருந்து செய்திகள்வரும் — எதிர்பார்த்த பணம் வராமல் இருக்கலாம். வீட்டில் குடும்பத்தினரிடையே கருத்து வேற்றுமைகள் வர இடம் உண்டு. தொண்டைவரட்சி, மறதி, மூட்டுவலி, நரம்புச் சோர்வு என்பன வர இடம் உண்டு. சிலருக்கு தோல் வருத்தம். வரும்தகுந்தவைத்தியரை நாடவும். பால், கீரைவகைகளை அதிகம் சேர்த்துக் கொள்ளவும். பிறரின் மன மறிந்து செயற்படவும். அல்லது வீண் பிரச்சினைகள் வந்து மன வேதனை ஏற்படும். வியாபாரம், குருத்துறை, சட்டத்துறையில் உள்ளவர்களுக்கு நல்லது.

★ அதிர்ஷ்டநாள்: — சனி, திங்கள், வியாழன், வெள்ளி.

## மீனம்

உண்மைகள் வெளிவரும் பொழுது, காலங்கள் கடந்து விடும் என யோசிக்கிறீர்களா? தொடர்ந்து வரும் வாழ்வில் நடந்து செல்லும் பொழுது நிகழ்வது விதியின் விளையாட்டு ஆகும். நீங்கள் நிதானமாகச் சென்று கொண்டிருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் பல புதிய திட்டங்களுடன் சென்றுகொண்டு இருப்பீர்கள். அளவுக்கு மீறிய செலவுகளால் கவலைகள் மேலிட இடமுண்டு. போக்குவரத்தில் இழப்புக்கள், செலவுகள் அதிகரிக்கும். வெளிநாட்டுத் தொடர்பு. வேலை வாய்ப்புக்கள் சிறப்புக்களைத் தர இடம் உண்டு. சனிபிடிக்கும். குடல்வருத்தம், மலச்சிக்கல், வாய்வுத்தொல்லைகள் என்பன ஏற்படும். கால் உளைவு வேதனை தரும். கடல்துறை, சட்டத்துறை மருந்துத்துறை, அச்சுத்துறை போன்றதுறைகளில் தொடர்பானவர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: — சனி, திங்கள், வியாழன், வெள்ளி.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

★★★★★★★★★★★★★★

புலமைப் பரிசில் பரீட்சை - 2000

யா/ துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலையில் கற்று சித்தியடைந்த

க. பிருந்தா — 163 புள்ளி
க. பிரகாஷ் — 143 புள்ளி
செ. உசாந்தினி — 142 புள்ளி

ஆகியோரையும்

இடம்பெயர்ந்து எமது பாடசாலையில் கல்வி கற்று சித்தியடைந்த

ஜெ. வினோஷன் — 160 புள்ளி
க. சிவாஜினி — 158 புள்ளி

ஆகியோரையும் வாழ்த்துவதோடு இவர்களின் வெற்றிக்கு முன்னின்று உழைத்த அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

— பெற்றோர்.

(சி/13595)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை

2000 ஆம் ஆண்டின் 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள்

| பெயர் | புள்ளி |
|---|---|
| 01. லாவண்யா கதிர்காமநாதன் | — 168 |
| 02. வினோதினி மகேந்திரராஜா | — 160 |
| 03. அபிராமி சிவகுமாரன் | — 159 |
| 04. முருகதாசன் சிவசயந்தன் | — 156 |
| 05. திவ்வியா புண்ணியமூர்த்தி | — 147 |
| 06. மாதங்கி முருகவேள் | — 147 |
| 07. இமாஜினி சந்திரசேகரம் | — 143 |
| 08. கிரிசானி சிவராஜா | — 141 |
| 09. சோதிகா இராஜசிங்கம் | — 141 |
| 10. பத்மநாதன் பிருந்தாபன் | — 138 |
| 11. கையிலாயநாதன் பிரதீபன் | — 135 |

ஆகியோரை வாழ்த்துவதுடன் மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகள் வைத்தும், விசேட பயிற்சிகள் கொடுத்தும் ஊக்கமும் உற்சாகமும் அளித்த அதிபர், உப அதிபர், பிரதம பாடசாலை மேற்பார்வையாளர் மற்றும் ஆசிரியர்களையும் மனப் பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

— பெற்றோர்.

(79912)

# கண்ணீர் அஞ்சலி

## கனகசபை மனோகரி

(பெண் பரிசாரகர் - பற்சிகிச்சைப் பிரிவு ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை)
26-10-2000

அமரர் கனகசபை மனோகரி அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பல்வைத்திய நிபுணரும்,
ஊழியர்களும்.
பற்சிகிச்சைப் பிரிவு
ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை

(சி/13597)

# 13 ஆம் ஆண்டு நினைவு கூருகின்றோம்



மலர்வு 30-12-1930 — உதிர்வு 28 10-1987

## அமரர் அ. செ. அந்தோனிப்பிள்ளை

(இளைப்பாறிய அரசாங்க எழுதுவினைஞர், வன இலாகா, யாழ்ப்பாணம்)

"அன்றியும் அவருடைய
தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த்
தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச்
சகலமும் நன்மைக்கு ஏதுவாக
நடக்கிறதென்று அறிந்திருக்கின்றோம்"
(ரோமர் 8:28)

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தற்காலிக முகவரி:
மக்லியட் வைத்தியசாலை,
கே. கே. எஸ். வீதி, இணுவில்.

நிரந்தர முகவரி:
தபாலக வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
கி. றி. ஜெனநாதன்
22, சந்தன மாதா கோயில் வீதி,
சுண்டுக்குளி.

(79880)

# தேசிய கல்வி நிறுவக பதிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 28
1999 — 2002 கல்வியாண்டுக்கான தொலைக் கல்விப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்து ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குப் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படாத ஆசிரியர்களில் தற்போது தொலைக்கல்வி மூலம் பயிற்சியைப் பெறுபவர்களும், பயிற்சிபெற விரும்புவோரும் தேசிய கல்வி நிறுவகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் உள்ள தொலைக் கல்விப் பிரிவில் தங்கள் விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு சிரேஷ்ட போதனாசிரியர் கேட்டுள்ளார்.

(ஐ-10)

# தேர்தல் கடமை கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஒக். 28
அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது தேர்தல் வன்செயல் கண்காணிப்புக் குழுவில் கடமை புரிந்தவர்களுக்கான கொடுப்பனவுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் வைத்துவழங்கப்படவுள்ளது.

உரியவர்கள் தங்களுக்குரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ஐ 10)

# சான்றிதழ் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 28
தொலைக்கல்விப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த கீழ்க்காணும் ஆசிரியர்களுக்குரிய சான்றிதழ்களை நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் இயங்கும் தொலைக் கல்விப் பிரிவில் பெற்றுக்கொள்ளுமாறுதெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் பெயர்கள் வருமாறு:-

விஜயகுமாரன் ஜசிந்தா, (ஆங்கிலம்), செல்லையா நிர்மலா (பரதநாட்டியம்). வேல்நாயகம் செல்வராணி (கர்நாடக சங்கீதம்), தம்பிப்பிள்ளை தனலட்சுமி (பரதநாட்டியம்), கிருஷ்ணபிள்ளை தமிழ்மலர் (பரதநாட்டியம்),

மேற்படி பயிற்சி நெறிக்குரிய சான்றிதழ்கள் தேசிய கல்வி நிறுவகத்தால் தொலைக் கல்விப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட போதனாசிரியர் ச. சரவணமுத்து அறிவித்துள்ளார்.

(ஐ-10)

சிமெந்துக் கூரை ஓடுகள்
(LMCRS)
லோகேஸ கூரை ஓட்டுத் தொழிற்சாலை
(இணுவில்)

ஜீரிசற், அரச சார்பற்ற நிறுவனங்களால் புனரமைப்புச் செய்யப்படும். வீட்டுத் திட்டங்கள், பாடசாலைக் கட்டடங்கள் போன்றவற்றிற்கு பயன்படும் சிமெந்துக்கூரை ஓடுகள், முகட்டோடுகள் விற்பனைக்குண்டு.

இயந்திரம் மூலம் தயாரிக்கப்படும் கொங்கிறீற் கற்களும் விற்பனைக்குண்டு.

தொழிற்சாலையும் விற்பனை நிலையமும்:
லோகேஸ்
கூரை ஓட்டுத்
தொழிற்சாலை,
இணுவில்.

(79572)

# 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 1956 — 06 — 25

ஆண்டவன் அணைப்பில் 1998 — 10 — 28

## அமரர் இராசரத்தினம் உதயகுமார்

(காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை ஊழியர்)

அனைவரையும் அரவணைத்த தெய்வமே!
ஆண்டிரண்டு மறைந்ததையா ஆறவில்லை
நம்துயரம், அடைந்திடுக சாந்தி என
வேண்டி நிதம் துதிக்கின்றோம்.

மனைவி, மைத்துனன்,
வளர்ப்பு மகன், மருமக்கள்,
பெறாமக்கள்,
தாய், சகோதரர்கள்.

மணற்பகுதி,
புத்தூர்.

(79931)

# மரண அறிவித்தல்கள்

## கந்தப்பு தவராஜா [பவா]

(நெல்லியடி மத்திய சந்தைக் குத்தகையாளர்)

கந்தப்பு தவராஜா 25-10-2000புதனன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி கந்தப்பு (ஓய்வுபெற்ற)- திருமதி க. சிவகாமி தம்பதியரின் அன்பு மகனும், திருமதி த. பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், வாசுகி, கோபிநாத் (யா/ விக்கினேஸ்வராக் கல்லூரி), சுதா, சுகிர்தா, சுகன்யா (மாணிக்கவாசகர் வித்தியாலயம்) அவர்களின் அன்புத் தந்தையும், விமலராஜா (நவலோகம்வெல்டிங்,நெல்லியடி) ஜெயராஜா(கொழும்பு), வில்வராஜா (கனடா), நளாயினி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரரும். வேலாயுதம், ஞானவடிவேல், சிவசுப்பிரமணியம், ஜெகதீஸ், யோகராணி, ஞானேஸ்வரி, ஜெகதீஸ்வரி, சுமதி, சுமங்கலி, சந்திரகுமார் (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும், A S. கந்தசாமி (கனடா) அவர்களின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28 — 10 — 2000) சனிக்கிழமை நண்பகல் 10 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவுகள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
க. விமலராஜா
(சகோதரன்).

கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(சி/13596)

## வல்லிபுரம் சின்னத்துரை (சாந்தினி)

(தையிட்டி, காங்கேசன்துறை)

கலைமகள் வீதி, தையிட்டியைப் பிறப்பிடமாகவும், ஆஸ்பத்திரி ஒழுங்கை மானிப்பாயைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சின்னத்துரை கொழும்பில் நேற்று முன்தினம் (26—10—2000) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற வல்லிபுரம் - ஆச்சிக்குட்டியின் அன்பு மகனும், சிவகுரு, மயில்வாகனம், காலஞ்சென்றவர்களான திருமதி கந்தப்பிள்ளை செல்லமுத்து, பொன்னையா பொன்னம்மா ஆகியோரின் சகோதரரும், சாந்தினி (U K), சாந்தகுமார் (U.K), சிவகுமார் (Norway), சுவேந்தினி (Norway). ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிந்தியா, சரணியா, கபிலன், இலக்கியா, துர்க்கா, ஆதுரன், விதுரன், லாவண்யன், ஐனுஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் இன்று (28—10—2000) சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்
சின்னத்துரை மகேஸ்வரி
(மனைவி)

Mahinda Funeral Service,
591, Galle Road,
Mountlaveniya

(79939)

# உதயன்

## எதற்கு முன்னுரிமை

ஆளுங்கட்சியைச் சேர்ந்த முன்னாசன எம். பிக்கள் ஒரு முக்கியமான விடயத்தை எடுத்துரைத்துள்ளனர்: நாட்டின் மிகப் பிரதானமான பிரச்சினையான இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தீர்க்கமான வழிமுறைகளை தேடுவதற்குப் பதிலாக, வேறு விடயங்களில் கவனம் செலுத்தி வருகின்றன என்று அவர்கள் குற்றஞ்சாட்டி உள்ளனர்,

நாட்டின் எல்லாக் கட்சிகளினதும் நிகழ்ச்சி நிரலில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிக்கே முதலிடம் வழங்கப்படவேண்டும் என்று ஆளுங்கட்சியின் பின்னாசன எம். பிக்கள் வலியுறுத்தி உள்ளார்கள்.

சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழு சுயாதீனபொலிஸ் ஆணைக்குழு, சுயாதீன பொதுச் சேவை ஆணைக்குழு ஆகிய மூன்றுக்கும் முன்னுரிமை கொடுப்பதைவிட இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியை முதலில் முன்னெடுக்கவேண்டும் என்பதே இவர்களின் கருத்து.

இவை குறித்துக் கவனம் செலுத்தினால் காலம் அதிலேயே கழியும். இனப்பிரச்சினைத் தீர்வில் ஆர்வம் குன்றிவிடும் என்பதும் ஆளுங்கட்சி பின்னாசன எம். பிக்களின் வாதம்.

வேறு விடயங்ளுககு முன்னுரிமை கொடுத்து இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியை பின்தள்ளி விடுவது வீடு எரியும் போது சங்கீதம் இசைத்துக் கொண்டிருப்பதற்கு நிகராகும்:

ஆகையால் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஏனைய கட்சிகளும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிக்கே முன்னுரிமை வழங்க வேண்டும். இனப் பிரச்சினை தமிழ் மக்களோடு மட்டும் தொடர்புடையது என்று தப்பாக எண்ணிவிடலாகாது அது நாடு முழுவதையும் எரித்துக் கொண்டிருக்கும் விவகாரம்.

அதனைத் தீர்க்கும் முயற்சியின் போது பல தடங்கல்கள், முரண்பாடுகள், எதிர்ப்புகள் வரும் என எதிர்பார்க்கலாம். எனினும் இனப்பிரச்சினைக்குத் தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய ஓர் அரசியல் தீர்வைக் காண்பது உடனடித் தேவை என்பதனை மறந்து விடலாகாது.

அதனை முன்னெடுப்பதில் எதனையும் செய்யும் அதிகாரத்தைத் தனது கையில் வைத்திருக்கும் அரசாங்கம் ஏனைய கட்சிகளுக்கு முன்னோடியாக விளங்க வேண்டும்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி கடந்த ஆறு வருடங்களாக இது விடயத்தில் திருப்திகரமான முறையில், ஆக்கபூர்வமான வகையில், இதய சுத்தியுடன், செயற்படவில்லை, ஏதோ ஒரு தரப்பு மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அந்தத் தரப்பே தடையாக இருப்பதாகக் "கதை அளந்து" காலத்தைக் கடத்தி வந்தது.

எதிர்கட்சிகள் தமது நிகழ்ச்சி நிரலில் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பது எத்துணை அவசியமோ—

அதேபோன்று, ஆளுங்கட்சியும் இது விடயத்தில் அரசியல் கட்சி நலனை ஒதுக்கிவிட்டு காலம் கடத்தும் நோக்கமில்லாமல் நேர்மையாக திறந்த மனத்துடன் செயற்படுவதும் அவசியம்.

## இறக்கும் தறுவாயில் எழுதிய கடிதத்துடன் மூன்று சடலங்கள்

## ரஷ்ய நீர் மூழ்கியிலிருந்து மீட்பு

மொஸ்கோ, ஒக். 58

பாஸ்டன் கடலின் அடியில் சிக்கிய ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பலான கேர்ஸ்க்கிலிருந்து நோர்வே சுழியோடிகள் 3 சடலங்களை மீட்டதுடன் பணியாளர் ஒருவர் இறப்பதற்கு சில நிமிடங்களின் முன்னர் எழுதிய கடிதம் ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

அணுசக்தி நீர் மூழ்கியில் அணுக்கதிர் வீச்சுப் பாதிப்பு இல்லை என்பதை உறுதி செய்து கொண்ட நோர்வே நாட்டுச் சுழியோடிகள், முன்னர் உடைத்துத் திறக்கப்பட்ட வாசல் ஊடாக உள்ளே நுழைந்து தேடுதல் நடத்தி 3 பணியாளர்களின் சடலங்களை மீட்டனர்.

மீட்கப்பட்ட சடலங்களில் ஒன்றின் சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதம் கண்டெடுக்கப்பட்டது.

பணியாளர்களில் 26 பேர் உயிர் தப்புவதற்காக பிராண வாயு உள்ள அறைகளில் மாறி மாறித் தங்கியிருப்பதாகவும்—

எங்கும் கடும் இருள் சூழ்ந்திருப்பதால் இருளுக்குள் வைத்தே இக்கடிதத்தை எழுதுவதாகவும் —

தமது கடைசி நிமிடங்களில் உதவியை எதிர்பார்த்திருப்பதாகவும்—

இறந்த அதிகாரி ஒருவரால் எழுதப்பட்ட அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் நீர் மூழ்கி விபத்தில் சிக்கியதற்கான காரணத்தைக் கண்டு பிடிக்க உதவும் அதேவேளை ரஷ்ய அரசு மீட்புப் பணிகளில் காட்டிய மெத்தனத்துக்கு கடும் எதிர்ப்பை மேலும் உருவாக்கும் எனவும் கருதப்படுகிறது.

கடந்த ஒகஸ்ட் மாதம் நோர்வே அருகில் பாஸ்டன் கடலின் அடியில் சிக்கிய ரஷ்ய அணுஆயுத நீர் மூழ்கியான கேர்ஸ்க்கிலிருந்த 118 பணியாளர்களும் உயிரிழந்ததும், ஒரு பணியாளரின் சடலம் அப்போது மீட்கப்பட்டதுடன் மற்றைய சடலங்களை மீட்கும் முயற்சி தற்போது நடைபெற்று வருவதும் தெரிந்தவையே.

## இசைக்கலைஞர் சேதுராமன் காலமானார்

பிரபல நாதஸ்வரக் கலைஞர் எல். கே. என். சேதுராமன் நேற்று முன்தினம் இரவு மதுரையில் மூளையில் ஏற்பட்ட இரத்தப் பெருக்கால் 72 வயதில் காலமானார்.

12 வயதிலிருந்து இசைப் பணியில் ஈடுபட்ட சேதுராமன் மதுரை மீனாட்சி ஆலய வித்துவானாக இருந்து வந்தார்.

தில்லானா மோகனாம்பாள் திரைப்படத்தில் சகோதரர் பொன்னுச்சாமியுடன் இணைந்து சேதுராமன் வழங்கிய நாதஸ்வர இசை வரவேற்பை பெற்றது குறிப்பிடத்தக்கது.

## நடிகர் அமிர்தாப்பச்சனுக்கு ரசிகர் கட்டியுள்ள கோயில்!

### பூஜையும் நடக்கிறதாம்

புதுடில்லி, ஒக். 28

இந்தியாவில் இந்தி நடிகர் அமிர்தாப்பச்சனுக்கு கோயில் கட்டி வழிபட்டு வருகிறார் ஒரு ரசிகர்.

அரியானா மாநிலம் கைதால் மாவட்டத்தில் புண்டாரி என்ற சிறு நகரில் வசிக்கும் பழவியாபாரியான 35வயது மகேந்திரசிங் என்பவரே அமிர்தாவுக்கு கோயில் கட்டியுள்ளார்.

இந்தக் கோயிலில் சமய சம்பிராதயங்களின் படி பூஜைகள் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

அமிர்தாப்பச்சன் நீண்ட காலத்தின் முன்னரே திரைப் படங்களில் நடிப்பதை நிறுத்திவிட்ட போதும், அவருக்கு இணையாக இதுவரை வேறு நடிகர்கள் வரவில்லை என்று மகேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டில் திருச்சி மாவட்டத்தில் நடிகை குஷ்புவுக்கு ரசிகர்கள் கோயில் கட்டியது நினைவிருக்கலாம். (ஒ—8)

## பங்களாதேஷில் ஹர்த்தால் சட்டபூர்வமாக அங்கீகரிப்பு

டாக்கா, ஒக். 28

ஹர்த்தாலை சட்டபூர்வமாக அங்கீகரித்து பங்களாதேஷ் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

வேலை நிறுத்தங்கள் மற்றும் ஹர்த்தால்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த

உலக அரங்கில்

3 நீதிபதிகள் குழு மேற்படி தீர்ப்பை ஒருமனதாக வழங்கியது.

அச்சுறுத்தல், எச்சரிக்கை போன்றவை இடம்பெறாவிட்டால் ஹர்த்தால் மற்றும் வேலை நிறுத்தங்கள் சட்டப்படி செல்லுபடியாகும் என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

மனுவின் மீதான விசாரணைகளின் போது பிரதான கட்சிகளின் கருத்தை நீதிபதிகள் கேட்டறிந்த பின்னரே இந்தத் தீர்ப்பை வழங்கினார்கள்.

பங்களாதேஷில் தொடர்ந்து இடம்பெற்று வரும் அரசியல்கட்சிகள் தொடர்புடைய வேலை நிறுத்தப் போராட்டங்களால் நாட்டின் பொருளாதாரம் பெருமளவில் நஷ்டமடைவதாக உலக வங்கி சமீபத்தில் விசனம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ—

## சனிக்கிரகத்தில் 4சந்திரன்கள்

சனிக்கிரகத்துக்கு மேலும் 4 சந்திரன்கள் உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிரகத்தின் பரப்பிலிருந்து 15 கிலோ மீற்றர் உயரத்தில் சுழன்று கொண்டிருக்கும் இவற்றுடன் சேர்த்து சனிக்கு 22 சந்திரன்கள் உள்ளதாகவும், இதற்கு அடுத்தபடியாக புதனுக்கு 21 சந்திரன்கள் உள்ளதாகவும் நியூயோர்க் கார்னல் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## கந்தன் கழல் போற்றி வந்தவினை நீக்கி சிந்தை தெளிவு பெற உதவும் கந்தசஷ்டி

விரதங்கள் மனதைப் புனிதப்படுத்தவும் தெய்வபக்தியை வளர்க்கவும் தெய்வ அருளைப் பெறவும் துணை செய்கின்றன. கந்தனின் பெருமை அறிந்து ஆறுநாள்களும் நோற்கும் நோன்பு கந்தசஷ்டி.

கந்தசஷ்டி நாள்கள் நல்ல எண்ணங்களை எண்ணவும் நல்லசொற்களைச் சொல்லவும் நல்ல செயல்களைச் செய்யவும் நம்மைத்தகுதி உடையவர்கள் ஆக்கிக் கொள்ளும் நாள்கள். இந்த மூவகை முயற்சிக்கும் பற்றுக்கோடாக இருப்பவன் முருகப் பெருமான்.

முருகப்பெருமான் தமிழ்மக்களின் கடவுள். சைவத்தமிழ் மக்களின் வாழ்வில் முருகப் பெருமான் இரண்டறக் கலந்துள்ளார்.

மனித குலம், தேவர் குலம் உய்வடைய முருகப் பெருமானின் தோற்றம், உற்ற துணையாக இருந்தது.

அருள்தரும் அலங்காரக் கந்தன், கலியுக வரதனாக, கண்கண்ட தெய்வமாக, சங்கப் புலவனாக, தந்தைக்கு உபதேசித்த சுவாமிநாதனாக, அமரர் இடர் தீர சமரம் புரிந்த குமரனாக, கற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்கும் களிப்புடையவனாக, திகழ் சரவணத்தோனாக, வேற்படை உடையவராக, பக்தர்களின் நெஞ்சில் நீங்காத இடம் பிடித்துவிட்டார்.

பாலசுப்பிரமணியனாக இளைஞர்களுக்கும், வள்ளி தெய்வயானை சமேதராக இல்லறத்தவர்களுக்கும், சுவாமிநாதனாக அறிஞர்களுக்கும், பழநி ஆண்டியாக துறவிகளுக்கும், தேவசேனாதிபதியாக வீரர்களுக்கும், ஆறுமுகச் செவ்வேளாக அனைத்து உயிர்களுக்கும் அருள் மழை பொழிந்து கொண்டிருக்கிறார்.

ஆத்மஞானம் தேடுபவர்களுக்கு சுப்பிரமணியன் என்ற நாமம் பெற்றும், இளமையும் எழிலும் பெற்றுச் செல்வங்கள் தருபவராகையால் "குமரன்" என்னும் திருநாமம் பெற்றும், ஒப்பற்ற அழகு பெற்று, முற்காலத்திலும் பக்தர்களைக் காப்பவராகையால் "முருகன்" என்ற நாமத்துடன், சைவத் தமிழ் மக்கள் நெஞ்சில் நீங்காத அருள் ஆட்சிபுரிபவராக விளங்குகின்றார்.

முருகப் பெருமானின் வேல் ஞானத்தைக் குறிக்கும். வேலின் அமைப்பைப்போன்று எமது அறிவும் கூர்மையாகவும், ஆழமானதாகவும், பரந்ததாகவும் இருக்க வேண்டும் என்றுதான் வேற்பெருமானை நாம் வணங்குகின்றோம். "வேலை வணங்குவதே நமது வேலை வேலை வணங்காது எமக்கு என்ன வேலை?" என்பது அறிஞர் வாக்கு ஆகும்.

"ஆடுகின்ற மயில் ஓங்காரமாகிய பிரணவத்தின் உருவம்" என்றே அருணகிரிநாதர் சொல்லுவார். எனவே மயில் மீது முருகன் வருவது ஓங்காரத்தில் முருகப்பெருமான் இருப்பதைக் குறிக்கும்.

முருகப் பெருமானின் சக்திகளாகிய, வள்ளியம்மை, தெய்வயானையம்மை, கரங்களில் முறையே விளங்கும் தாமரை, நீலோத்பலமலர்கள் என்றும் மலர்ந்திருக்கும் வள்ளி, தெய்வயானை, சமேதரான முருகப் பெருமானை நீங்கள் உள்ளன்போடு வழிபட்டால், எங்கள் வாழ்வும் எப்போதும் மலர்ந்த வாழ்வாக இருக்கும்.

நினைப்பவனைக் காப்பது மந்திரம். இறைநாமத்தினால் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய நோய்கள் தீர்க்கப்படும். முருகனின்நாமம் சடாச்சரம் எனப்படும் ஆறு எழுத்துக்களை உடையதாக அமைந்து, ஆறுதலைத் தருவது. சரவணபவ. வந்த வினையும் வருகின்ற வல்வினையும் கந்தன் என்று சொல்லக் கலங்கிடும். நெக்கு, நெக்கு என உருகுவார் நெஞ்சில் புக்கிருந்து அருள்சுரப்பவன் கந்தன். சரணக்கமலாலயத்தை அரை நிமிட நேரத்திலாவது தவமுறை தவறாது தியானிக்க வேண்டும். மருவும் அடியார்கள் மனத்தில் நின்று விளையாடுபவர் குமரன்.

எங்கள் இதயம் என்ற மண்ணில் முருக நாமத்தை நட்டு, அன்பு என்ற நீரைப் பாய்ச்சினால் முருகபக்தி என்ற விருட்சம் வளர்ந்து அருளாகிய ஞானக்கனி கிடைக்கும்.

கந்தனை முறைப்படி வணங்கினால், அவனருளால் அறுபகைகளை வெல்ல முடியும். மனக்குழப்பம் நீங்கி ஞான ஒளி பெறும்! கர்வம் அடங்கும். மலை போன்ற துன்பம் நீங்கி மனத்தூய்மையும் வேண்டும் வரங்களும் கிடைக்கும்.

உரும்பிராய்
**நந்தன்**

## நாளை

ஐப்பசி 13,
ஞாயிற்றுக்கிழமை
திதி: துதியை
பிற்பகல் 2.26 வரை.
நட்சத்திரம்: விசாகம்
முற்பகல்: 9.08 வரை.
சுபநேரம்: 9.03—10.33
ராகுகாலம்: 4.33—06.03
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

நீ சொல்வதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அதைச் சொல்ல உனக்கிருக்கும் உரிமையை என் உயிரைக் கொடுத்தும் காப்பேன்.

பிரெஞ்சு வாசகம்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### லவ்பேட்ஸ்

லவ்பேட்ஸ(Love Birds) பச்சை, நீல நிறக் குருவிகள்விற்பனைக்கு உண்டு. ஞாயிறு காலை10மணிக்குப் பின்னா 67/43,தா்மலிங்கம் அவெனியூ, கொட்டடி, யாழ்ப்பாணம். (79694)

### விற்பனையாகின்றது

'ஸ்கந்த சஷ்ட்டி விரதம் ஏன்? எப்படி? எப்பொழுது?' விரத முறைகள், பாரணை, உத்தியாபனம் 'கோப்பாய்-சிவம்' எழுதிய கைநூல் சா்வானந்தமய பீட வெளியீடு. விலை ரூபா 20/- எல்லாப் புத்தகக்கடைகளிலும் கிடைக்கும். (79792)

### இலக்கியக் கட்டுரைகள்

இலங்கை முழுவதும் கேட்கின்ற நாடகங்களை எழுதுகின்ற அராலியூா் ந. சுந்தரம்பிள்ளையின் இலக்கிய விமா்சன நூல். இலக்கியக் கட்டுரைகள், சிறுகதை, நாவல், நாடகம் எல்லாவற்றிற்கும் விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. க.பொ.த. மாணவா்களுக்கு உதவும். (79689)

### தவறிவிட்டது

யாழ்ப்பாணத்தைச் சோ்ந்த சிமியோன் சதாகரன் என்பவருடைய விசேட அ.அட்டை (இல.0901019723), பருத்தித்துறை செல்லும போது தவறிவிட்டது. கண்டெடுத்தவா்கள் தயவு செய்து வீனஸ்டெல்கா, 284, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (79924)

லட்சுமி நடராசா என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.787093736V) யும் விசேட அ.அ. (இல.0902007954) யும், அலுவலக அ.அட்டையும மணிப் பேசுடன் 26-10-2000 அன்று நல்லூா் கந்தசாமி கோயிலுக்கும் முடமாவடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவா்கள் தயவுசெய்து இல.11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் அல்லது பிறவுண் வீதி சந்தி 'அருள் கொமினிக்கேசன்' என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (79929)

பிரணதாா்த்தி ஹரசா்மா ரகுரஹமன் என்பவருடைய தேசிய அ.அ. (இல.761724215V)யும் விசேட அ.அ. (இல.0901016017)யும் திருநெல்வேலுக்கும், சிவன் கோயிலுக்கும இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவா்கள் சிவன்கோயில் 100,வடக்கு வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (79930)

பியதாஸா சதாரூபி என்பவரது விசேட அ.அட்டை, 25-10-2000 அன்று யாழ். மின்சார நிலைய வீதியில தவறிவிட்டது. கண்டெடுத்தவா்கள் தயவு செய்து, பியதாஸா, நீதிமன்ற ஒழுங்கை, மல்லாகம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (79932)

### விற்பனைக்கு

கல்பேட்ஸ் விற்பனைக்குண்டு. இலவசமாக சுத்தம் செய்யப்படும். தொடா்பு: 31,மான்ஸ்,பாடசாலை வீதி, உடுவில் சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரா் வளவு). (79883)

ஜெனரேட்டா விற்பனைக்கு (லிஸ்டா்), **22HP, 12.5 K.w3** பேஸ்டைனமோவும் உடன் விற்பனைக்குண்டு. தொடா்பு'செங்கமலம் வாசம்', குளப்பிட்டிசந்தி, கொக்குவில். (79864)

ரியூட்டரித தளபாடங்களும் விளம்பரப் பலகையும் உடன் விற்பனைக்குண்டு. தொடா்பு: சம்பியன்லேன். கொக்குவில் (**K.K.S.** வீதிப்பக்கத்திலிருந்து 3 ஆம் வீடு) (79923)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

ஆறுமுகம் ஜெப்சிகா என்பவரது அ. அட்டைகள் கீழ்வரும் விலாசத்திலுள்ளது .நேரில பெற்றுக் கொள்ளவும். சிவம் வெற்றிலைக் கடை, மாா்க்கட், யாழ்ப்பாணம். (79925)

### இருமாத கொடுப்பனவு கிடைத்தது

யாழ்.ப.நோ.கூ. சங்கத்தில் பணியாற்றும் பணியாளா்களுக்கு இரண்டு மாதங்களுக்கான இடா்க்காலக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.கடந்த ஓகஸ்ட், செப்ரெம்பா் மாதங்களுக்கான மாதாந்த இடா்க் காலக் கொடுப்பனவே வழங்கப்படவிருப்பதாக சங்கத் தலைவா் சீ.வி. கே. சிவஞானம் தெரிவித்தாா்.

இந்த மாதாந்தக் கொடுப்பனவு நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளா்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இம்மாதத்துக்கான கொடுப்பனவு அடுத்த மாதக் கொடுப்பனவுடன் சோ்த்து வழங்கப்படும் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1944 - 04 - 17



மறைவு
1999 - 11 - 08

**திருமதி தயானந்தன் தையல்நாயகி**
(பிள்ளை அக்கா)

திதி: 2 - .10 - 2000

**கண்ணுக்குள் எமை வைத்து**
**கண்ணியமாய் வாழவைத்த - எம் தெய்வமே!**
**ஆண்டு ஒன்று நகா்ந்தாலும்**
**உங்கள் அன்பு ஊற்று என்றும் நிலைத்திருக்கும்.**
***உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிராா்த்திக்கின்றோம்.***

*பிரிவின் துயரால்*
*அன்புடன் நினைவு கூரும்,*
**கணவா், பிள்ளைகள்.**

*43, அச்சுக் கூட ஒழுங்கை,*
*கொக்குவில்.*
(79822)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணுலகில்
09 - 05 - 1918



விண்ணுலகில்
30 - 09 - 2000

**அமரா் சின்னத்தம்பி இராமலிங்கம் K.S.R.**
(**R.P.N.** மில் சாவகச்சேரி)

**கண்ணீரால் எத்தனை இரவுகள் கரைந்து விட்டன?**
**கற்பனை செய்து பாா்க்க முடியவில்லை**
**கடைசி நேரக் கிரியையைக் காணக் கூட முடியவில்லை**
**கதறி அழுகின்றோம் கண்ணீா் துடைக்க**
**நீங்கள் இல்லையே!**

30-09-2000 அன்று எனது தந்தை சிவபதம் எய்திய செய்தி கேட்டு எனது வீட்டிற்கு வந்து ஆறுதல் கூறிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை (29.10.2000) ஞாயிற்றுக் கிழமை எனது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிராா்த்தனையிலும மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.


* இடம்பெயா்வு சூழ்நிலை காரணமாக உற்றாா், உறவினா், நண்பா்கள் அனைவரினதும் இருப்பிட முகவரி தெரியாததால் தனிப்பட்ட அழைப்பு தரமுடியாமைக்கு வருந்துகின்றேன்.

நிரந்த முகவரி:
*கச்சாய் றோட்,*
*சாவகச்சேரி.*

தகவல்:
*திருமதி நவநீதன் வரதா* (மகள்)
*இல. 7, டச்சுவீதி, உடுவில்.*
(79927)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
22 - 07 - 1937



விண்ணில்
28 - 10 - 1998

**அமரா் சின்னத்தம்பி கதிா்காமத்தையா**
(B.Sc.Hon(Cey.), M.Sc., Phd. (Me.Gill Canada.)
(Ret'd Director - Dept. of Export Agriculture.)

எங்கள் குலவிளக்கே! கல்வி, உழைப்பு,
உயா்வு, புகழ் குடும்ப பாசம் அனைத்தும்
நிறைந்த குன்றமே! எங்கள் அன்புக்கும் பெருமதிப்புக்கும்
உரிய உங்களை எங்கள் இதயக் கோயிலில்
தெய்வமாக என்றும் வணங்குவோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**மனைவி, மக்கள்,**
**சகோதரா்கள், மைத்துனா்கள்,**
**உற்றாா், உறவினா்.**

**21/36, Riverdale Road,**
**Anniwatta,**
**Kandy.**
*96,முதலாம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.*
(79820)

## ஈராண்டு நினைவலைகள்

தோற்றம்
24 - 10 - 1910



மறைவு
20 - 10 - 1998

**அமரா் கந்தப்பிள்ளை வல்லிபுரம்**

திதி: 28 - 10 - 2000

**ஆண்டு இரண்டு ஆனாலும் ஆறாது எம் துயரம்**

ஆத்ம சாந்திக்காகப் பிராா்த்திக்கும்:
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

*நவக்கிரி, புத்தூா்.*
(79895)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி

தோற்றம்
23 - 07 - 1976



மறைவு
19 - 05 - 2000

**திருமதி அஜந்தன் அனுராதை**

**பாசத்தின் உறைவிடமாய் பண்பின் நிலைகளாய்**
**விளங்கிய எங்கள் குடும்பத்தின் அணையாத தீபமே!**
**ஆறுமாதம் என்ன பல ஆயிரம் மாதங்கள் தான்**
**சென்றாலும் ஆறிடுமோ உன் ஞயா்.**

உங்கள் பிரிவால் துயருறும்:
**கணவா், பிள்ளைகள்,**
**அப்பா, அம்மா, சகோதரா்கள்.**

தகவல்:
*அஜந்தன் (கணவா்),*
*உடுவில் கிழக்கு,*
*கற்பக பிள்ளையாா் கோயிலடி, உடுவில.*
(79921)

## ஓராண்டு நினைவினில் ஓயாத துயரினில்!



**தெய்வேந்திரம் நகுலேஸ்வரன்**
(யாழ். மத்திய கல்லூரி-பழைய மாணவன்)

மலா்வு
31-07-1976

உதிா்வு
28-10-1999

நற்குணம் படைத்த நகுலா
நம் குல விளக்கே!
வேரோடு சாய்ந்த உங்கள்
வேதனையில் தவிக்கின்றோம்.
வந்த கடன் முடிந்ததென
விதி வழியே சென்று விட்டீா்
ஓராண்டு ஆயிரமாய் மாறிடினும்
உங்களை நாம் மறவோமே.
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிராா்த்திக்கின்றோம்.*

உங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினா்.**

*சதுமலை தெற்கு,*
*மானிப்பாய்.*
(79817)

# பயன் தரும் மரம் நாட்டு விழா

## 28.10.2000

### மேலதிக அரச அதிபர் வாழ்த்து

சங்கானையில் காளி அம்பாள் தேவஸ்தானமும், காளி அம்பாள் சனசமூக நிலையமும் இணைந்து மரம் நாட்டும் விழா ஒன்றை பொறுப்பேற்று நடத்த முன் வந்தது பெரிதும் பாராட்டுக்குரியது. நாடு வளமுற மழை தேவை. மழை தேவையெனில் மரம் தேவை.

பசுமையான மரவளம் அழிந்தால் அவ்விடம் பாலை வனமாக மாறிவிடும்.

ஆகவே முடியுமானவரை எங்கும் மரங்கள் நட்டு இப் பூமியின் புனிதத் தன்மையைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும். இதை உணர்ந்து மேற்படி இரு ஸ்தாபனங்களும் இணைந்து இக்காரியத்தை செய்ய முன் வந்தது பாராட்டுக்கு உரியது. இப்பணி தொடர வேண்டும். வாழ்க அவர்களது பணி.

இயற்கையைப் போற்றுவோம்!

**து.வைத்திலிங்கம்,**
(மேலதிக அரச அதிபர், யாழ்.மாவட்டம்).

### தருமத்தின் வழி செல்வோம்

எவர்க்கும் துன்பம் தராமல் தனக்கும் பிறர்க்கும் நன்மை தரும் கருமங்கள் நல்லவை. அவையே செய்யத் தக்கவை. ஆதலால் தருமத்தைப் போற்றி வாழ்ந்தால் அன்பு நெறி தழைக்கும்.

சங்கானை காளி அம்பாள் தேவஸ்தானம், சனசமூக நிலையம் இணைந்து மேற்கொள்ளும் தருமப் பணி சுடர்விட்டுப் பிரகாசிக்க எல்லாம் வல்ல மகா கணபதியை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**தலைவர்,**
**ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார்**
**கோயில் பரிபாலன சபை,**
சித்தன்கேணி.

### உதவிக்கல்விப் பணிப்பாளர் வாழ்த்து

சங்கானை மேற்கு, காளி அம்பாள் தேவஸ்தானமும், காளி அம்பாள் சனசமூக நிலையமும் இணைந்து அப்பிரதேசத்தில் உள்ள வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் சிறார்களைத் தேர்ந்தெடுத்துச் சீருடை, பாடசாலை உபகரணம் ஆகியன வழங்குவது போற்றுதற்குரியது.

இவ்வறப்பணியுடன் மரம் நாட்டும் தொண்டும் செய்து வருகின்றமை பாராட்டுதற்குரியது.

'இனிய நறும் கனிச் சோலைகள் செய்தல்' என முதலடி தொடங்கி இறுதியில் 'அன்னையாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என்று மகாகவி பாரதியார் பாடியுள்ளார். பாரதி வாக்குக் கிணங்க இரு புண்ணியங்களையும் செய்துவரும் இரு ஸ்தாபனங்களையும் கல்விச் சமூகமே பாராட்டுகிறது. எமது கல்விக் கோட்டமும் வாழ்த்துகிறது.

**அ.தற்பரானந்தன்**
(உதவிக் கல்விப் பணிப்பாளர்,
உடுவில் கோட்டம்)

**கனகராசா மதிபாலராசா அவர்களின்**
**திருமண நிகழ்வினைக் கொண்டாடுமுகமாக**



**சங்கானை மேற்கு காளி அம்பாள் தேவஸ்தானமும், சங்கானை காளி அம்பாள் சனசமூக நிலையமும் ஒன்றிணைந்து நடத்துகின்றன.**

லண்டனில் இன்று (28.10.2000) சனிக்கிழமை நடைபெறவுள்ள கனகராசா மதியாலராசாவின் (சங்கானை) திருமணம் தொடர்பான சிறப்பு நிகழ்வுகள்

**காலம்: இன்று (28.10.2000) சனிக்கிழமை**

மரம் நாட்டும் இடங்கள்:
சங்கானை பொது இடங்கள், கோயில்கள்.

**நேரம்: காலை 8 மணிமுதல் 12 மணிவரை**

பிரதம அழைப்பாளர்கள்:
திட்ட முகாமையாளர் திரு.அல்வாரோ வடில்லோ
(பட்டினிக்கெதிரான நிறுவனம், யாழ்ப்பாணம்)
GENERAL MANAGER PLANNING
Mr.ALVARO VADILO
(Jaffna Forut Organization High Level Officers
Project Manager Action Faim Jaffna)

யாழ்.மாவட்ட கல்விமான்களும், அரச உயர் அதிகாரிகளும், பிரதேசசபை அதிகாரிகளும், புரிந்துணர்வுள்ள மக்களும்; பொது ஸ்தாபன பிரதிநிதிகளும், பல மதகுருமார்களும், வைத்திய கலாநிதிகளும், வர்த்தகத் தொழிலதிபர்களும் பங்குபற்றும் விழா.

மு.கு.: நான்கு பாடசாலைகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட மிக வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 10 மாணவர்களுக்கு சீருடை, பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படும். ஆகையால் மனிதநேயம் படைத்த அபிமானிகளும், பொதுநலன் விரும்பிகளும் அனைவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்
நிர்வாகிகள்,
காளி அம்பாள் தேவஸ்தானம்,
காளி அம்பாள் சனசமூக நிலையம்.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது நிலையமும் காளி அம்பாள் தேவஸ்தானமும் இணைந்து நடத்தும் மாபெரும் மரம் நாட்டுவிழா வைபவத்தினால் தற்போது நாட்டின் மரங்களெல்லாம் தறிக்கப்பட்டு நாட்டின் சூழல் மாசடைந்துள்ள இக்காலகட்டத்தில் இந்த மரம் நாட்டு விழா சகல தேவாலயங்களுக்கும் பொது ஸ்தாபனங்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக அமையும் என்பதையும் எல்லோரும் இதைப் பின்பற்றினால் நாட்டின் வறுமையும் நீங்கி சூழலும் மேம்படும். ஆகையால் சமய குருமார்கள், மூதறிஞர்கள், பெரியோர்கள், கல்விமான்கள், எல்லோரும் எமது வருங்கால சிறுவர்களின் கல்விவளம், செல்வச் சிறப்பு, இவைகளை எமது நாட்டிலே வளம் பெறச் செய்து எம் நாட்டை உயர்த்த வேண்டும் என உணர்ந்து செயற்பட்டால் நிச்சயம் எமது நாடு வளம்பெறும். இதற்கு காளி அம்பாள் தேவஸ்தானத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் காமதேனு மண்டபமும் சிறுவர் படிப்பகமும் ஓர் எடுத்துக்காட்டாகவுள்ளன.

இவ்வரிய செயலை முன்னெடுத்தவர் காளி அம்பாள் தேவஸ்தானத்தில் காலாண்டு காலத்திற்கு மேல் உறுப்பினராக உள்ளவரும் எமது நிலையத்தின் போசகருமாகிய திரு.செ.கோபாலகிருஸ்ணன் அவர்களே.

அன்னாரின் அயராத சேவையாலும் சமயப் பணியாலும் இடையறா ஊக்குவிப்பாலும் நிறைவேறியதென்றால் அது மிகையாகாது. மென்மேலும் அன்னாரின் சமயத்தொண்டு, சமூகத்தொண்டு வளர வேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றோம்.

குறிப்பு:சங்கானை வாசியும் தற்போது லண்டனில் வசிப்பவருமாகிய கனகராசா - பாக்கியம் தம்பதிகளின் புதல்வன் மதிபாலராசாவின் திருமணம் லண்டனில் நடைபெறுவதால் இங்கு வாழும் அவரின் உறவினர்கள் அத்திருமணத்தின் நிறைவேற்று ஞாபகமாக இவ்வைபவத்தை நடத்துவது மிக விரும்பத்தக்கது.

**நா.சின்னத்தம்பி** (தலைவர்),
**நிர்வாகிகள்.**

### வாழ்த்துச் செய்தி

ஆலய சேவை அறத்தை வளர்த்தலும் கருணை மிக்க சமூகத்தை நெறிப்படுத்தலும் ஆகும். அவ்வகையில் சங்கானை மேற்குக் காளி அம்பாள் தேவஸ்தானமும் காளி அம்பாள் சனசமூக நிலையமும் ஒன்றிணைந்து பயன்தரு பணிகளைச் செய்வது பாராட்டுக்குரிய விடயமாகும். இப்பணியில் முன்னின்று பாடுபடும் அனைவரையும் வாழ்த்தி வணங்குகிறேன். இச் சங்கத்தின் பயன்தரு மரம் நாட்டு வைபவத்திற்கு காரணகர்த்தாவாக பணி செய்யும் செல்லையா கோபாலகிருஸ்ணன் என்றும் பாராட்டுக்குரியவராவார்.

செஞ்சொற் செல்வர்
**ஆறு.திருமுருகன்.**

## பயன்தரு இந்நிகழ்வினை பாராட்டி வாழ்த்துபவர்கள்


**தரன் ரேடர்ஸ்**
130, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல. 01 - 2664

**எஸ்.ஆர்.தங்கமாளிகை**
இல.82 1/3,கடற்கரை வீதி, கொழும்பு-11.
தொ.பேசி இல. 330937

**சிறி அம்பாள் கொமினிகேசன்**
சீரணி, சண்டிலிப்பாய்.
தொ.பேசி இல. 0094-213229, 021-3228

**சங்கானை பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**
(வரைவுள்ளது) சங்கானை.

**மெடலான்ட ஆங்கில மருந்து நிறுவனம்**
பிரதான வீதி, சங்கானை.

**பகீரதன் ஹாட்வெயர்ஸ் ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி, சங்கானை.
தொ.பேசி இல. 070-212713

**நியூ மெடி பிளஸ் மருந்தகம்**
பிரதான வீதி, சங்கானை.

**நீற்றா எண்ணெய் ஆலை**
சலேசியார் வீதி, சங்கானை.

**பபித்தா நகைத் தொழிலகம்**
அம்பிகாவத்தை வீதி, சங்கானை.

**விவசாய சம்மேளனம்**
வலிகாமம், சங்கானை.

**உதயா வெதுப்பகம்**
வல்லை வீதி, சங்கானை.

**வர்த்தக சங்கம்**
சங்கானை.

**ஆசைப்பிள்ளை அன் சன்**
**தொலைத்தொடர்பு சேவை**
இல.10,பஸ்நிலையம் முன்பாக, சங்கானை.
தொ.பேசி இல. 070-212293.

**திருமகள் தொலைத்தொடர்பு சேவை**
பிரதான வீதி, சங்கானை.
உள்ளூர் தொ.பேசி இல. 070-213070,
வெளியூர் தொ.பேசி இல. 009470-213090,


(39953)

# படுகொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தப் படுகொலை வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியது. இனியும் இந்தகைய சம்பவங்கள் தொடர்வதை அனுமதிக்கக்கூடாது.

எனவே இப்படுகொலைக்கு எதிரான உணர்வுகளை ஒவ்வொருவரும் வெளிப்படுத்த வேண்டியது அவசியமானது.

சிங்கள பௌத்த பேரினவாதிகளின் இந்த ஈனச்செயல் முழு ஜனநாயக உலகையும் அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது. அவசியமற்ற யுத்தத்தின் தொடர்ச்சி தருகின்ற இத்தகைய பக்க விளைவுகளை துடைத்தெறிய வேண்டும். இயல்பு வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்ப வேண்டும். தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு நிலைநாட்டப்படவேண்டும். இவற்றுக்காகப் பாடுபடும் ஈ.பி.டி.பி. இப்படுகொலைச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறது. அத்துடன் இத் தாக்குதலானது ஜனநாயக மறுமலர்ச்சிக்கு பாடுபடும் சக்திகள் மீதும் வீழ்ந்துள்ள பலத்த அடியாகவே ஈ.பி.டி.பி.கருதுகின்றது.

கடந்த காலங்களில் பௌத்த சிங்களப் பேரினவாதம் தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைகளைக் கருத்துக்கு எடுக்கவில்லை. அடக்கி ஒடுக்கி இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தவே அது முற்பட்டு நிற்கின்றது. பாரிய இனக் கலவரங்களை தூண்டிவிட்டு அவ்வப்போது தென்னிலங்கை எங்கும் பரந்துவாழும் தமிழ்மக்களைப் பதம் பார்த்து நின்றது.

1983 இல் கறுப்பு ஜூலையில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் உதவி பெற்ற குண்டர்களால் தமிழர்கள் தாக்கப்பட்ட விதம் இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

பலநூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். பலரது சொத்துக்கள் சூறையாடப்பட்டன. அப்பொழுது வெலிக்கடையில் சிறை வைக்கப்பட்டிருந்த போராளிகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. 53 பேர் உயிரிழந்தனர். பலர் காயப்பட்டனர். இச் சம்பவத்தின் கோர வடுக்களைச் சுமந்தவர்களில் எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் ஒருவர். சிறையில் வாடும் இளைஞர்களின் சேம நலன்களில் அக்கறையும் ஆர்வமும் காட்டி வந்த அவர் மீதும் களுத்துறைச் சிறைச்சாலையில் வைத்தும் தாக்குதல் நடத்தப்பட்டது நினைத்துப் பார்க்கத்தக்கது.

அநாவசிய யுத்தத்தை மேலும் தொடராது ஜனநாயக செயற்பாடுகளில் பூரண நம்பிக்கை கொண்டவர்களாகிய நாம் எமது கண்ணீர் அஞ்சலியை உயிரிழந்த தமிழ் சகோதரர்களுக்கு செலுத்த வேண்டும். அதற்காக இன்று சனிக்கிழமை குடாநாடு முழுவதும் பூரண துக்கம் அனுஷ்டிக்க ஒத்துழைக்கும் படி அனைவரிடமும் அன்பாக வேண்டுகின்றோம்.

★ பண்டாரவளை விந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் நடைபெற்ற தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்து சட்டத்தின் முன்பாக நிறுத்த வேண்டும். இப்படுகொலையின் பின்னணியிலுள்ள அரசியல் சக்தியினை அம்பலப்படுத்த வேண்டும்

★ தாக்குதலால் பாதிப்படைந்த அனைவருக்கும் நியாயமான நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்.

★ நாட்டின் எந்த மூலையிலும் வாழும் தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தவேண்டும்.

★ இனவெறியைத் தூண்டும் சக்திகளுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இந்தக் கோரிக்கைகளை வெளிப்படுத்திட, இன்றைய தினத்தினை துக்க தினமாக கடைப்பிடிப்போம் - என்றுள்ளது. (இ)

## அரசாங்கமே.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பண்டாரவளைத் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்தவர்கள் விடுதலைப்புலிகள் அல்லர். அவர்களை விடுதலைப்புலிகள் என்று அரசு கூறிக்கொள்வது தவறு. அவர்கள் அப்பாவிப் பொதுமக்களே.

இந்த மோசமான நடவடிக்கைக்கு ஸ்ரீலங்கா அரசே முழுப்பொறுப்பு. இந்தச் சம்பவம் அப்பாவிப் பொதுமக்கள் மீதான ஸ்ரீலங்கா அரசின் இனப் படுகொலைகளை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து சிறைகளில் அடைத்துவைத்து சட்டத்துக்கு முரணான முறையில் அரசு நடந்துகொண்டமை ஆதாரபூர்வமான உண்மை.

அப்பாவித் தமிழ்மக்களை திட்டமிட்டு கொலை செய்து வருவது இலங்கை அரசுக்கு வழமையான நடவடிக்கைகளில் ஒன்றாகிவிட்டது.

இப்படியான கொலைகளை சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் வன்மையாகக் கண்டிக்க வேண்டும். இத்தகைய கொலைகளை நிறுத்தும் வகையில் இலங்கை அரசின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்று உள்ளது. (அ-8)


**புலமைப்பரிசில் 2001**

மாதிரிப் பரீட்சை 7 இல்
அதிகூடிய புள்ளி பெற்றோர்

* உ. நிவேதிகா - 179
* ஆ. ஜதிகானந் - 171
* அ. சாயினி - 168

அடுத்த பரீட்சை
29.10.2000 ஞாயிறு
காலை 8.30மணி

**நாவலர்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(79963)


## 2 இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

அதேசமயம் -

தடுப்பு முகாமின் பொறுப்பதிகாரியான அபயவர்த்தனாவும் விசாரணைக்காக கொழும்புக்குக்கொண்டு செல்லப்பட்டுள்ளார் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக வியாழக்கிழமை கைது செய்யப்பட்டிருந்த அந்தக் கிராமவாசிகள் 200 பேரின் வாக்குமூலங்களை பொலீஸார் பதிவு செய்துள்ளனர்.

அதே நேரம் ஊர்வாசிகள் சிலர் நேற்றுப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதல் சம்பவத்தில் உயிர் தப்பிய இரு தமிழ்க் கைதிகளை நேற்றுப் பொலீஸார் கைது செய்துள்ளனர். பலத்த பாதுகாப்புடன் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (இ-3-8)

## அரைகுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தம் ஒன்றை அறிவித்துள்ளனர். போலி யோ மருந்து வழங்குவதை குழப்புவதற்கே இந்த ஏற்பாடு என்றே கருதுகிறோம். பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டத்தையும் குழப்புவதற்கே இன்றைய தினம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்று கருதவேண்டியுள்ளது.

ஹர்த்தாலுக்கு வர்த்தகர் சங்கத்தின் ஆதரவும் பெறப்படவில்லை. ஏனைய பொதுஅமைப்புக்களிடமும் கலந்தாலோசிக்கப்படவில்லை.

மேலும் சனிக்கிழமை அரைநாள் விடுமுறையைத் தேர்ந்தெடுத்து அரைகுறை எதிர்ப்பைக் காட்டுவதையும் தமிழ்ப்போராட்டச் சக்திகளை மழுங்கடிப்பதையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். மேற்படி ஹர்த்தாலில் பங்குபற்றாமல் வர்த்தக ஸ்தாபனங்களைத் திறந்தும், போக்குவரத்துச் சேவைகளை இயக்கியும், பாடம்புகட்டுமாறு தமிழ்தேசியஇனத்தின் சார்பில் பொதுமக்களுக்கு நாம் வேண்டுகோள்விடுக்க விரும்புகிறோம் - என்று உள்ளது. (அ)

## ...யில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புனர்வாழ்வு முகாமில் அணிந்திருந்த ஆடைகளுடனேயே இன்றும் இருக்கிறார்கள்.

அவர்களில் காரைதீவை சொந்த ஊராகக் கொண்ட 12 வயதுடைய ரூபன் என்ற சிறுவனும் மூதூரைச் சேர்ந்த 16 வயதுடைய சுதாகரன் என்ற சிறுவனும் அடங்குவர்.

ரூபன் என்ற இந்தச் சிறுவன் அம்பாறை நகரில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த சமயம் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த இளைஞர்கள் காட்டுமிராண்டித்தனமாக ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களால் தாக்கப்பட்ட சமயம் பொலீஸார் துப்பாக்கிப்பிரயோகமும் செய்துள்ளனர்.

மட்டக்களப்பு இருதயபுரத்தைச் சேர்ந்த ஈஸ்வரன் என்பவர் பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இரண்டு கைவிரல்களை இழந்த நிலையில் சிகிச்சை பெறுகின்றார்.

ஏனைய இளைஞர்கள் தாக்கப்பட்டு கை, கால்கள் வெட்டப்பட்ட நிலையில் மரணித்ததாகக் காயமடைந்தவர்கள் தெரிவித்தனர்.

வெட்டுக்காயங்களுக்கும் தாக்குதல்களுக்கும் இலக்காகி எழுந்து நடக்க முடியாத நிலையில் விழுந்து கிடந்த இளைஞர்கள் மீது, முகாமில இருந்த மெத்தைகள், படுக்கை விரிப்புக்கள் போடப்பட்டு தீ வைக்கப்பட்டதாக காயமுற்றவர்கள் கூறினார்கள்.

முதல் நாள் இரவே தங்களைத் தாக்க ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டு வந்தனர் என்றும், நடுநிசியானதும் அவர்கள் திரும்பிப் போய் மீண்டும் அதிகாலை வந்து வெறியாட்டத்தை ஆரம்பித்தனராம்.

இத்தாக்குதலைத் தவிர்க்க நிர்வாகத்துக்கு கால அவகாசம் இருந்தது. ஆனால் நிர்வாகம் எதையும் செய்யவில்லை என்று அவர்கள் கவலை தெரிவித்தனர்- என்றார்.(இ-3)

## யாழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ராசா, ஏழாலை மேற்கு, மல்லாகத்தைச்சேர்ந்த சிவஞானசுந்தரம் சிவரூபன் ஆகியோரின் சடலங்களே இங்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

இன்று காலை 8 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்து சடலங்களைப பொறுப்பேற்கும் படி உறவினர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இருவரின் இறுதிக்கிரியைக்கான செலவுக்காக 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவிருக்கின்றது. (இ-3)

## தாக்குதலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அது விடயமாக ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்வோம். சம்பவதினம் இரவு முகாம் கைதிகள் காஸ் சிலிண்டரை வெடிக்க வைத்து காவலாளிகளைத் தாக்கியுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் கைதான ஒருவர் அந்த முகாமுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தார். அவர் விடுதலைப்புலி உறுப்பினர். அவர் அங்கு வந்தபின்பே ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன - என்றார்.

## நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

| நேற்றுவரை கிடைத்த நிதி:- | | ரூபா |
|---|---|---|
| முன்கொண்டுவரப்பட்டது | - | 124,151 |
| 1. வே.பொ.பாலசிங்கம் - யாழ்ப்பாணம் | - | 1,000 |
| 2. பொன்னம்மா பொன்னம்பலம் - அனலைதீவு | - | 1,000 |
| 3. வீ.மனோகரன் - பிறவுண் வீதி | - | 201 |
| 4. ஜனநாயகத்தைத் தேடுபவர் - திருநெல்வேலி | - | 200 |
| 5. ஓர் அன்பர் தையிட்டி - காங்கேசன்துறை | - | 200 |
| 6. ஒரு நெடுந்தீவுக் குடும்பம் | - | 1,500 |
| 7. வ.ஐ.அம்பலவாணர் - நெடுந்தீவு | - | 200 |
| 8. ஓர் அன்பர் - அராலி மத்தி | - | 200 |
| 9. செல்வன் கு.சசிதரன் - திருநெல்வேலி வடக்கு | - | 100 |
| 10. ஒரு நலன் விரும்பி - கொக்குவில் கிழக்கு | - | 500 |
| 11. ஒரு நலன்விரும்பி - வண்ணார்பண்ணை | - | 500 |
| 12. ஒரு நலன்விரும்பி - வைமன் றோட் | - | 500 |
| 13. நடராசா செல்வநாயகம் - தெல்லிப்பழை | - | 500 |
| 14. தமிழ்த்தொண்டன் - மாதகல் | - | 1,000 |
| 15. லயன்ஸ் எஸ்.எஸ்.தங்கராஜா - 'மருதமஹால்', மானிப்பாய் | - | 500 |
| 16. இளைஞர் உருவாக்கல் இயக்கம் - யாழ்.மரியன்னை பேராலயம் | - | 1,000 |
| 17. அ.ஜேசுராஜா - யாழ்ப்பாணம் | - | 500 |
| 18. மேசி ஜெயரோசா ஜேசுராஜா - யாழ்ப்பாணம் | - | 500 |
| 19. கியுடெக், மத்தியூஸ் றோட் - யாழ்ப்பாணம் | - | 5,000 |
| 20. க.ஆர்த்திகா - நீர்வேலி வடக்கு | - | 1,000 |
| 21. ஓர் அன்பர் - பிறவுண் றோட் | - | 150 |
| 22. அம்மன் - 86, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் | - | 1,000 |
| 23. ரீ.ரட்ணசபாபதி - பொன்னாலை மூளாய், சுழிபுரம் | - | 500 |
| 24. கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் - கரவெட்டி | - | 1,000 |
| 25. எல்.மதுசன் - தொண்டமனாறு | - | 1,000 |
| 26. அதிபர், ஆசிரியர்கள் - வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம் | - | 1,500 |
| 27. யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் | - | 1,000 |
| 28. க.ப.முகுந்தன் - யாழ்ப்பாணம் | - | 500 |
| 29. ஒரு நண்பி - யாழ்ப்பாணம் | - | 500 |
| 30. ஆசிரியர் - மறவன்புலோ | - | 200 |
| 31. ஜெகதீஸ்வரராஜா நிஷாந்தினி - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | - | 150 |
| 32. சிவசாந்தமாலா - நாவலர் வீதி, யாழ்ப்பாணம் | - | 100 |
| 33. ஓர் அன்பர் - மானிப்பாய் | - | 2,000 |
| 34. பொ.ஈஸ்வரன் - மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை | - | 200 |
| 35. ச.கிருஷ்ணேந்திரன் - மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை | - | 200 |
| 36. ம.பிரதீபன் மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை | - | 200 |
| 37. இரசாயனவியல்துறை 4ஆம் வருட மாணவர்கள் - விஞ்ஞான பீடம் | - | 1,000 |
| 38. இந்து இளைஞர் சங்கம் (வை.எம்.எச்.ஏ) - தெல்லிப்பழை | - | 2,250 |
| 39. ஸ்ரார் கிறபிக் ஆட்ஸ் - நல்லூர் | - | 500 |
| 40. அன்புத் தங்கை - வல்வை | - | 200 |
| 41. சி.இராசசிங்கம் - அத்தியடி | - | 500 |
| 42. அருள்நாயகம் - வேலணை மேற்கு | - | 200 |
| 43. ஓர் அன்பர் - சுந்தர்மடம் | - | 200 |
| 44. ஓர் அன்பர் - கொக்குவில் மேற்கு | - | 200 |
| 45. ஓர் அன்பர் - அரியாலை | - | 500 |
| | | 149,852 |

## ஈ.பி.டி.பியின் வேண்டுகோள்

பண்டாரவளை விந்துனுவெவ படுகொலையைக் கண்டித்து குடாநாடு தழுவிய ரீதியில் "துக்க அனுஷ்டிப்பு" நடைபெறவுள்ளது. யாழ்.குடாநாட்டில் உள்ள வர்த்தக ஸ்தாபனங்கள், பொதுஸ்தாபனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் ஏனைய ஸ்தாபனங்களும் தங்கள் ஸ்தாபனங்களையும் நிறுவனங்களையும் மூடியும் மற்றும் போக்குவரத்து சங்கங்கள் தங்கள் போக்குவரத்து சேவையினை இடைநிறுத்தியும் இன்று சனிக்கிழமை நடைபெற உள்ள "துக்க அனுஷ்டிப்பு"க்கு பூரண ஆதரவு வழங்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)**
(C/13594) யாழ்.மாவட்டம்


**திருட்டுப்பற்றிய அறிவித்தல்**

எனக்குச் சொந்தமான **EBK 2000** மொடல் **SRIRAM HONDA GENERATOR EN. NO. 8166966** இலக்கமுள்ள மின் பிறப்பாக்கி திங்கட் கிழமை **(23.10.2000)** இரவு எனது வீட்டிலிருந்து திருடப்பட்டுள்ளது.

இதுபற்றி யாராவது தகவல் தெரிந்தால் அல்லது வாங்கி வைத்திருந்தால் அருகில் உள்ள பொலீஸ் நிலையத்துக்கோ அல்லது எனக்கோ அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

M.அருளப்பு
ஏழாலை மத்தி,
ஏழாலை.
(79865)



**எக்சலன்ற்**
விக்கினேஸ்வராக் கல்லூரி வீதி, நெல்லியடி.

**தென்மராட்சி மாணவர்களுக்கு!**

இடம்பெயர்ந்த மாலை
நேரப் பாடசாலை
மாணவர்களுக்கான
காலை வகுப்புகள்
தரம் - 9, 10
ஆரம்பம்: 30.10.2000
திங்கள் - காலை
6.30 மணி
* **O/L** இற்கான அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது.
* ஏனைய வகுப்புகளுக்கான புதிய அனுமதி மிக விரைவில்.
(79946)



**DAY CLASS**
ஆரம்பிக்கமாட்டீர்களா?
**எங்கே?**
நாளை இதே இடத்தில்......
(79899)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.